

தனி பிரதி ரூ. 5/–
ஆண்டு சந்தா ரூ. 60/–

# அன்பு பகிர்வு இயக்கம்

செய்திமலர்

மலர் : 8
இதழ் : 1
நவம்பர் – 2011

## லோத்தின் மனைவியை நினைத்துக்கொள்ளுங்கள்.

லூக்கா 17:32

## .... அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்....

மத்தேயு 24:37

ஆசிரியர் சகோ. வே. தேவதாஸ்

## சுதேச ஊழியர் சாட்சி



# Rev. ரமேஷ் P. வசுனியா

### மத்தியப்பிரதேசம்

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்! எனது பெயர் ரமேஷ் P. வசுனியா. நான் மத்தியப்பிரதேசத்தில் சொக்வாடா என்ற கிராமத்தைச் சேர்ந்த பீல் ஆதிவாசி.

எங்கள் கிராமத்து ஜனங்கள் அனைவரும், அந்தகார இருளில் வாழ்ந்து வந்தோம். சாராயத்தை அதிகமாக குடிப்பதும், வில்–அம்புகளைக் கொண்டு மற்றவர்களிடம் சண்டையிட்டு, அவர்களிடமிருப்பதைக் கொள்ளையடிப்பதை தொழிலாகக் கொண்டவர்கள். நான் அநேக விதமான பாவங்களைச் செய்து கொண்டு, சாராயம் குடித்துக் கொண்டு, இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறியாமல் பாவ இருளில் வாழ்ந்து வந்தேன். இந்த சூழ்நிலையில் நான் அசுத்த ஆவிகளை வணங்கி வந்ததால் தீய சக்திகளின் ஆதிக்கத்தினால் வியாதிப்பட்டு வாழ்ந்து வந்தேன்.

எனக்கு நோய் குணமாகவேண்டுமென்று அநேக மந்திரவாதிகளிடம் சென்று பலவிதமான மந்திர பூஜைகளைச் செய்தோம். மருத்துவமனைகளுக்குச் சென்று, மருத்துவம் பார்த்தோம். ஆனாலும் எந்த பலனுமில்லை. மிகவும் சோர்ந்து போன நிலையில் இருந்தேன்.

அப்போதுதான் எங்கள் கிராமத்தின் பக்கத்துக் கிராமத்தில் கர்த்தருடைய ஊழியத்தினை செய்து வரும் ஷாலோம் சுதேச ஊழியரைக் குறித்துக் கேள்விப்பட்டு, அவரிடம் சென்றால் நோய் குணமாகும் என்று அவரிடம் என்னை அழைத்துச் சென்றனர் எனது குடும்பத்தினர்.


சுதேச ஊழியர் எங்களுக்கு இயேசு கிறிஸ்துதான் உண்மையான தெய்வம் என்ற சுவிஷேசத்தினைக் கூறி ஜெபித்தார். ஜெபத்தினைக் கேட்டு தேவன் எனக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார். இந்த அற்புதத்தினால் நான் இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஆலயத்திற்கு தொடர்ந்து சென்று தேவனை ஆராதித்து வந்தேன்.

அதன்பின் தேவன் எனது சொந்த மக்களைக் குறித்த பாரத்தைக் கொடுத்தார். அவர்களுக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்று, எனது வாழ்வை கர்த்தருக்கென்று அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, குறுகிய கால வேதாகமப் பயிற்சி பெற்று ஊழியம் செய்து வந்தேன். தற்போது B.Th., படித்து முடித்து 2009ம் ஆண்டு ஷாலோம் போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு ஊழியம் செய்து வருகிறேன்.

தொடர்ந்து எனக்காகவும், எனது குடும்பத்திற்காகவும், நான்கு பிள்ளைகளுக்காகவும், நாங்கள் செய்து வருகின்ற ஊழியங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

இந்த சுதேச ஊழியரைத் தாங்குவோர் : **Jesus With Us Church,** Thoothukudi.

## உங்கள் சகோதரனிடமிருந்து....



***கிறிஸ்துவுக்குள் மிகவும் அன்பானவர்களே!***

*ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.*

உங்களுடன் இந்த மலர் மூலமாக தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். கடந்த 10 மாதங்கள் தேவன் எவ்வளவு ஆச்சரியமாக நம்மை நடத்தி வந்தார் என்பதை நினைக்கும்போது நன்றி உள்ள இருதயத்துடன் அவரைத் துதிப்போம். இவ்வருடம் முடிவடைவதற்கு 2 மாதங்கள் உள்ளது. நாம் தேவனுக்கு பிரியமானவர்களாய், அவர் சித்தத்தை அறிந்து தேவனுக்காக எப்படி வாழ்ந்தோம்? நம் பொருத்தனைகளை சரியாய் செலுத்தினோமா? ஆண்டவருக்காக இந்த வருடத்தில் என்ன செய்தோம்? ஆத்துமாக்களை ஆதாயம் செய்தோமா? ஆவிக்குரிய வாழ்வில் வளர்ச்சி அடைந்தோமா? தேவனுக்காக அதிகமாக கொடுத்தோமா? என்று இவ்வருடத்தின் மீதமுள்ள 2 மாதங்களிலும் தேவனுக்கு நேராக நம்மை ஆராய்ந்து பார்ப்போம்.

தேவ கிருபையினாலும் உங்கள் அனைவரின் ஜெபத்தினாலும் கடந்த அக்டோபர் மாதத்தில் ஒவ்வொரு ஊழியங்களையும் தேவன் அபரிமிதமாக ஆசீர்வதித்தார். குறிப்பாக ஷாலோம் மருத்துவ முகாம், ஆரம்ப சுகாதாரப் பயிற்சி முகாம், சிறுவர்கள் முகாம், ஊழியர் கூடுகை அனைத்திலும் தேவன் பெரிய காரியங்களை செய்தார்.

### ஷாலோம் மிஷன் ஞாயிறு

குறிப்பாக ஷாலோம் மிஷன் ஞாயிறு (அக்டோபர் 9,16,23 தேதிகளில்) குஜராத், மத்தியபிரதேசம், இராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களில் வெகு ஆசீர்வாதமாக அமைந்தது. தேவகிருபையால் சுமார் ரூ.15 இலட்சங்கள் பீல் ஆதிவாசி விசுவாசிகள் உற்சாகத்துடன் கவர் காணிக்கைகளை வழங்கி உள்ளார்கள். கடந்த ஆண்டைக் காட்டிலும் 25% அதிகமாக வழங்கியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நமது ஷாலோம் சபைகள் ஜெபிக்கும், ஆத்தும ஆதாயம் செய்யும் சபைகளாய் மட்டுமல்ல, தேவனுக்காக உற்சாகத்துடன் கொடுக்கும் திருச்சபைகளாய் விளங்குவதற்காக தேவனுக்கே மகிமை செலுத்துவோம்.

### சுவிஷேச நற்செய்தி கூட்டங்கள்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் 12 இடங்களில் அதாவது ஒவ்வொரு மாதமும் 48 இடங்களில் சுவிசேஷ நற்செய்தி கூட்டங்கள் நம் பீல் சுதேச ஊழியர்கள் மூலமாக நடைபெற்று வருகின்றன. செப்டம்பர் மாதத்தில் நடைபெற்ற கூட்டங்கள் மூலமாக, சுமார் 950க்கும் மேலாக அற்புத சாட்சிகளைப் பெற்றுக் கொண்டோம். சுமார் 500 குடும்பங்கள் புதிதாக தேவனை ஏற்றுக் கொண்டார்கள். சில சாட்சிகளை உள்ளே பிரசுரித்து உள்ளோம். தேவன் பயன்படுத்தும் பீல் சுதேச ஊழியர்களுக்காக தேவனைத் துதித்து இன்னும் 2015க்குள் 10 இலட்ச ஆத்துமாக்கள் சந்திக்கப்பட இம்மாபெரும் தரிசனப் பணிக்காக தொடர்ந்து ஜெபியுங்கள்.

**சிறப்பு வாலிபர் கூடுகைகள் & ஆசீர்வாத கூடுகை**

**06.10.2011** அன்று மத்தியபிரதேசம் **போபாலிலும், 22.10.2011** அன்று ராஜஸ்தான் **அஜ்மீரிலும்** நடைபெற்ற வாலிபர் கூடுகையில் தேவன் அடியேனை பயன்படுத்தினார். சுமார் 325 வாலிபர்கள் தேவனுக்கென்று ஊழியம் செய்ய ஒப்புக் கொடுத்துள்ளார்கள். பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தின் வல்லமை பலமாய் இறங்கி வந்தது. மேலும் 15.10.2011 அன்று **அகமதாபாத்தில் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில்** நடைபெற்ற ஆசீர்வாத கூட்டத்திலும் செய்தியளித்து ஜெபம் நடந்த தேவன் கிருபை தந்தார். தேவன் வல்லமையாக கிரியை செய்து அநேகரை அபிஷேகித்து ஆசீர்வதித்தார்.

**பெண்கள் சிறப்பு முகாம் – மும்பை**

அதுபோல் **மும்பையில் 06.10.2011** அன்று **தமிழ் மெதடிஸ்ட் திருச்சபையில்** நடைபெற்ற **பெண்கள் சிறப்பு முகாமில் சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்கள் சிறப்புச் செய்திகளை வழங்க தேவன் கிருபை தந்தார். ஒவ்வொருவர் மீதும் தேவன் அபிஷேகத்தின் வல்லமையும், குடும்பங்களுக்கு தேவ அசீர்வாதமும் இறங்கி வந்தது. அநேகர் தெய்வீக சுகம் மற்றும் விடுதலை பெற்றார்கள். இதுவரை நடைபெற்ற பெண்கள் முகாம்களில் இந்த முகாமில்தான் நாங்கள் தெய்வீக வல்லமை வெளிப்பட்டதை கண்டோம் என்று சாட்சி கொடுத்தார்கள்.

**பீல் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் 2011**

கர்த்தருக்குச் சித்தமானால் நவம்பர் 8,9,10 ஆகிய தேதிகளில் நம் அனைத்து சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் குஜராத்தில் ஆனந்த் பட்டணத்தில் நடைபெற உள்ளது. ஊழியர்கள், ஊழியக்காரிகளாக சுமார் 1000 பேர்கள் பங்கு பெற உள்ளார்கள். தேவனுடைய பாதுகாவல், பராமரிப்பு, மற்றும் ஆவியானவரின் தொடுதலுக்காவும், 10 இலட்ச ஆத்தும ஆதாய தரிசனத்தை ஊழியர்கள் பெற்றுக் கொள்ளவும், குறிப்பாக முகாமின் செலவிற்காக **ரூ. 8 இலட்சங்கள்** சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்

செய்திகள் கொடுப்பதற்காக வருகை தரும் **Pas. ராஜன் எட்வர்ட்** (கிறிஸ்துவின் சேனை, திருநெல்வேலி), **சகோ. அகஸ்டின் ராஜசேகர்** (முதலூர்), **Dr. அன்பு ராஜன், (Peace Health Centre,** பாளையங்கோட்டை**) Pas. டேனியல் குழுவினர்**, மும்பை (ஆராதனை & செய்தி) ஆகியோரையும், மேலும் என்னையும், **சகோதரி. வஹிதா தேவதாஸ்** அவர்களையும் தேவன் வல்லமையாக பயன்படுத்த ஜெபியுங்கள்.

**வேதப்புத்தகங்கள் விநியோகம்**

தேவ கிருபையால் இதுவரை வேதாகமத்திற்காக கிடைக்கப் பெற்ற நிதி உதவியின் மூலமாக 1500 வேதப்புத்தகங்கள் சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மிக மிக சந்தோஷமாக வேதாகமங்களை எடுத்து சென்றார்கள். இன்னும் உடனடியாக 3500 வேதாகமங்கள் வழங்கப்பட வேண்டும். (மொத்தம் இந்த ஆண்டு 10 ஆயிரம் வேதாகமகங்கள் தேவை) உற்சாகாகமாக உங்கள் பங்குகளை அனுப்புங்கள். குறிப்பாக சபை போதகர்கள் தங்கள் சபையின் விசுவாசிகளிடம் கூறி உங்கள் சபை மூலமாக 25 அல்லது 50 அல்லது 100 வேதாகமங்களை கொடுக்க முன்வர அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

## பீல் ஆதிவாசி சிறுவர்கள் முகாம்

மத்தியப்பிரதேசத்தில் **அந்தர்வேலியா** கிராமத்தில் நடைபெறும் Compassion Project சிறுவர்கள், இராஜஸ்தான் **– பிஜல்பூர், கும்புரா, ஹைஜாமால்** பகுதிகளில் உள்ள சபைகளில் சிறுவர்களுக்கான சிறப்பு முகாம்கள் அக்டோபர் **15,18,19,22** ஆகிய தேதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்றன. சுமார் **800க்கும் அதிகமான** சிறுவர்கள் அபிஷேகம் பெற்றார்கள்.

## ஆலயக் கட்டுமான பணிகள்

**குஜராத்தில்** கரம்பா, கர்வாணி, ரீசும்ரா, லிம்பாகேடி, பாவ்கா –II, **மத்தியபிரதேசத்தில்** ரூபாகேடா, காலாகேத், கச்சல்தாரி, சூலியா, பாண்டிசேரா, ஜாபாதாரா, ராம்புரி, பாண்டாகாபர், தேவ்கா, கேர்தா, சாதடா, கோபால்பூரா, தேல்வாணி, மான்லி, **இராஜஸ்தானில்** கோய்கா, சராக்கணி, காட்டா, டாடா வட்லா, பட்டார், சபல்பூரா ஆகிய கிராமங்கள் உட்பட **25 கிராமங்களில்** ஆலய கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு உள்ளது. தடைகளின்றி கட்டப்பட, சரியான நேரத்தில் கட்டப்பட, நிதி உதவிகள் சரியாக கிடைக்கப் பெற ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

## கிறிஸ்துமஸ் மனமகிழ்ச்சி பண்டிகை நாட்கள்

மேலும் கிறிஸ்துமஸ் மனமகிழ்ச்சி நாட்களுக்காக பீல் ஆதிவாசிகள், சபை விசுவாசிகள் ஆயத்தமாகி வருகிறார்கள். இவ்வருடம் **"கிறிஸ்துவின் முதல் வருகை நற்செய்தியை"** அதி தீவிரமாக அறிவிக்கப்படும் நாட்களாக கொண்டாட உள்ளார்கள். 500 சுதேச ஊழியர்கள் மற்றும் பணித்தள அலுவலக ஊழியர்கள் குடும்பங்களுக்கும், 1200 பீல் ஆதிவாசி மாணவர்களுக்கும் கிறிஸ்மஸ் பண்டிகைக்காக வெகுமதியாக புத்தாடைகளும், வெகுமதிகளும் வழங்க ரூ. 8 இலட்சங்கள் தேவைப்படுகிறது. இம்மலரை வாசிக்கும் ஒவ்வொரு அன்பர்களும் உங்களது உற்சாகமான காணிக்கைகளை அனுப்பி தேவ ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள அன்புடன் கேட்கிறேன்.

தொடர்ந்து எங்கள் குடும்பத்திற்காகவும், தூத்துக்குடி தலைமை அலுவலக ஊழியர்களுக்காகவும் முன்னேற்றப் பணி ஊழியர்களுக்காகவும், பணித்தள அலுவலக ஊழியர்களுக்காகவும் மற்றும் திட்டப்பணிகளின் ஊழியர்களுக்காகவும், அவர்களின் குடும்பங்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**"இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: அத்திமரத்தின் கீழே உன்னைக் கண்டேன் என்று நான் உனக்குச் சொன்னதினாலேயோ விசுவாசிக்கிறாய்; இதிலும் பெரிதானவைகளைக் காண்பாய் என்றார்".** (யோவான்1:5) என்ற வசனத்தின்படி இந்த மாதத்தில் பெரிய காரியங்களை தேவன் உங்களுக்கு செய்வாராக. ஆமென்!

*தேவ அறுவடைப் பணியில் உங்கள் அன்பு சகோதரன்,*

(பேராயர் தேவதாஸ்)

**குறிப்பு : பேராயர் அவர்களுடன் தொடர்பு கொள்ள 09377445468**

# மனுஷகுமாரன் வெளிப்படும் நாள்

சிறப்புச் செய்தி : **Bishop. V. தேவதாஸ்**

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

***ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்கள்.***

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகை மிக சமீபம் என்று வானத்தை பார்த்துக் கொண்டிருக்கும் காலங்களில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். அநேக வேதப் பண்டிதர்கள் கடைசிகால தீர்க்கதரிசன வியாக்கியானங்களையும், ஆவிக்குரிய கருத்துக்களையும் சபைக்கு எடுத்து உரைத்து வருகிறார்கள். அநேக சம்பவங்களை உலகத்தில் காணும்போது நம் உள்ளம் உருகுகிறது. கொடிய பஞ்சங்கள், வெள்ளங்கள், கடல் அலை சீற்றங்கள், தீயினால் வரும் சேதங்கள், பூமி அதிர்ச்சிகள், பேரழிவுகள், கொடிய விபத்துக்கள், கலவரங்கள், தீவிரவாதங்கள், கொடுமையான நோய்கள், தேசத்திற்கு விரோதமாக தேசங்கள், போர்கள், விஞ்ஞான உலகின் கண்டுபிடிப்புகள் அனைத்தையும் காணும் போது கடைசி கால அத்தியாயத்தில் நாம் வாழ்வது தெரிகிறது.

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மனுஷகுமாரன் வெளிப்படும் நாள் என்று தெளிவாக கூறியுள்ளார். லூக்கா 17:20–37 வரை வாசித்து பாருங்கள். மனுஷகுமாரன் வெளிப்படும் நாட்கள் நெருக்கும்போது உலகத்தில் உள்ள ஜனங்கள் எப்படிப்பட்டவர்களாயிருப்பார்கள்? என எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக இயேசு கிறிஸ்து நோவாவின் நாட்கள், லோத்தின் நாட்களை நினைவு கூரும்படி குறிப்பிட்டுள்ளார். அவர்கள் நாட்களில் நடந்தது போலவே, மனுஷகுமாரனின் நாட்கள் வரும் போதும் நடக்கும் என்று இயேசு கூறியுள்ளார்.

மட்டுமல்லாமல் பரிசுத்த பவுல் II தீமோத்தேயு 3:1–5 எழுதியிருப்பதை வாசித்து பாருங்கள். மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக! எப்படியெனில் மனுஷர்கள் ⏩தற்பிரியராயும் ⏩பணப்பிரியராயும் ⏩வீம்புக்காரராயும் ⏩அகந்தையுள்ளவர்களாயும், ⏩தூஷிக்கிறவர்களாயும் ⏩கீழ்ப்படியாதவர்களாயும் ⏩நன்றியறியாதவர்களாயும், ⏩பரிசுத்தமில்லாதவர்களாயும் ⏩சுபாவ அன்பில்லாதவர்களாயும் ⏩இணங்காதவர்களாயும் ⏩இச்சையடக்கமில்லாதவர்களாயும் ⏩பகைக்கிறவர்களாயும் ⏩துரோகிகளாயும் ⏩துணிகரமுள்ளவர்களாயும் ⏩இறுமாப்புள்ளவர்களாயும் ⏩சுகபோகப்பிரியராயும் ⏩ வேஷம் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்.

இந்த வசனங்களின் வெளிச்சத்தில் நாம் பார்க்கும்போது எவ்வளவு ஜாக்கிரதையாக நம் விசுவாசத்தையும், இரட்சிப்பையும், அழைப்பையும் காத்துக் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்து லோத்தின் மனைவியை நினைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார். நாம் சற்று லோத்தின் மனைவியை குறித்து ஆராய்வோம். அவளுடைய வாழ்க்கை எவ்வளவு பரிதாபமான முடிவாய் இருந்தது. அவள் பின்னிட்டு பார்த்து உப்புத்தூணாக மாறினாள் என்று வேதத்தில் வாசிக்கிறோம். நாமும் பின்னிட்டுப் பாராதபடி முன் செல்ல நம்மை அர்ப்பணிப்போம்.

## கிருபையை இழந்த லோத்தின் மனைவி

வேதத்தில் பாபேல் கோபுரத்தின் சாபத்திற்கு பின்பு, தேவன் பாவ உலகத்தை இரட்சித்து ஆசீர்வதிக்க ஒரே ஒரு குடும்பத்தை அதாவது ஆபிரகாம் குடும்பத்தை (ஆதியாகமம் 12ம் அதிகாரத்தில்) அழைத்தார். ஆபிரகாம் எல்லாவற்றையும் விட்டு விட்டு புறப்படும்போது, லோத்தை மட்டும் தன்னுடன் அழைத்துக் கொண்டார். தேவனும் லோத்தின் குடும்பத்திற்கு ஆபிரகாம் நிமித்தமாக கிருபை பாராட்டினார். ஆபிரகாம் நிமித்தமாகத்தான் லோத்திற்கு தேவ கிருபை கிடைத்தது. தேவன் சோதோமை அழிக்க நினைத்த போது, தம் தாசன் ஆபிரகாமின் விண்ணப்பத்தின் நிமித்தம் லோத்தின் குடும்பத்தார் மீது கிருபை பாராட்டினார். தேவ தூதர்கள் அவர்களின் கரங்களைப் பிடித்து ஊர் என்ற இடத்திற்குச் செல்லவும் தேவன் கிருபை பாராட்டினார். இத்தனை கிருபைகளை தேவன் பாராட்டியும், அவள் மனைவி அந்த கிருபையை இழந்து விட்டாள் என காண்கிறோம்.

எனக்கன்பானவர்களே! நம் வாழ்க்கைப் பாதையில், ஊழியப் பாதையில் நமக்கு தேவன் பாராட்டின கிருபையை, தேவன் நம்மை இரட்சித்தாரே, அபிஷேகித்தாரே, எத்தனை நன்மைகளை தந்தாரே, ஊழியப்பாதையில் நடத்தி வந்தது அவர் கிருபையே, நமக்கு நல்ல சுகபெலன் தந்தாரே அந்த கிருபைகளை எண்ணி தேவனைத் துதிக்க வேண்டும். நாம் நிற்பதும் நிர்மூலமாகமாலிருப்பதும் அவர் கிருபையே! நாம் அந்த கிருபையில் நிலைத்திருக்கும்போது ஆசீர்வாதத்தை இழந்து விடமாட்டோம். தேவன் கிருபையாக அழைத்து பயன்படுத்தும்போது, ஆசீர்வதித்து உயர்த்தும்போது, தேவன் வெறுக்கிற பெருமை என்ற பொல்லாத பாவம் நமக்குள் வந்து விடுமென்றால், கிருபையை இழந்து விடுவோம். அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே.

ஆதலால், தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது (யாக்கோபு 4:6) ஆகவே ஒருவேளை கிருபையை இழந்திருந்தாலும் கூட, தேவ பாதத்தில் கதறிய சிம்சோனை போல, நாமும் நம்மைத் தாழ்த்தி அவர் கரத்தில் ஒப்புக் கொடுப்போம். நிச்சயமாக மறுபடியும் இழந்து போன கிருபைகளை தேவன் உங்களுக்கு தந்தருள்வார். லோத்தின் மனைவியைப் போல் தேவன் நமக்கு தந்த கிருபைகளை இழந்து விடாமல் காத்துக் கொள்வோம்.

## தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமை

லோத்தின் குடும்பத்தார் மீது தேவன் இரக்கம் பாராட்டினார். ஆகவே தான் தேவ தூதர்கள் சோதோம் பட்டணத்தை அழிப்பதற்கு முன்பாக, லோத்தின் வீட்டிற்கு வந்து விருந்து சாப்பிட்டார்கள். தேவ திட்டத்தை விளக்கி கூற கேட்டார்கள். மேலும் சோதோமின் தீய மனிதர்கள் கைக்கு விலக்கி காத்தார்கள். தாமதப்படுத்தப்படும்போது 4 பேரின் கைகளை பிடித்து வெளியேற்றினார்கள். தயவாக அருகில் உள்ள பட்டணம் ஊர் வரை செல்ல அனுமதிப் பெற்றார்கள். ஆனால் தேவதூதர்கள் கொடுத்த ஒரே கட்டளை ''பின்னிட்டு பாராதே''. அந்த கட்டளைக்கு கூட லோத்தின் மனைவி கீழ்ப்படியவில்லை. இந்த கடைசி நாட்களிலும் தேவன் நமக்கு எவ்வளவு கிருபைகளை பாராட்டினாலும், அவர் வார்த்தைக்கும், வசனத்திற்கும் கீழ்ப்படிய

வேண்டும். நாம் எப்பபடி வாழ வேண்டும்? குடும்பம் எப்படி இருக்க வேண்டும்? சபையில் நம் பொறுப்புகள் என்ன? எப்படி ஊழியம் செய்ய வேண்டும்? என்ற எல்லாக் கற்பனைகளையும், கட்டளைகளையும் தேவன் நமக்கு தந்துள்ளார். ஆனால் நாம் அறிந்தும் அவர் வசனத்திற்கு கீழ்ப்படியவில்லையானால், தேவ கோபாக்கினை நம் மீது வரும். கிருபைகள் கடந்து விடும். தண்டனைக்குள்ளாகாதபடி எச்சரிக்கையுடன் வாழ்வோம்.

## தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் இல்லாமை

லோத்தின் மனைவி தேவன் தந்த கிருபைகளையும் பாராட்டி, நன்மைகளையெல்லாம் பார்த்தாலும் அவர் சொன்னபடி நடந்தால் தேவன் நம்மை நடத்துவார், நம்மை ஆசீர்வதிப்பார் என்ற விசுவாசம் அவளிடம் இல்லாமற் போயிற்று. தன் கையினால் சம்பாதித்த பணம், வீடு, உலக ஆஸ்திகள் மீது நம்பிக்கை ஆசீர்வாதங்களை தரும் தேவன் மீது நம்பிக்கை இல்லாமை, எதிர்காலத்தை குறித்த பயம், அநித்தியமான உலகத்தின் மீது நம்பிக்கை ஆகியவற்றுடன் இருந்தது மட்டுமல்லாமல் அவள் இருதயம் கர்த்தரை நம்பாமல் அநித்தியமான பாவங்களில் இருந்தது. மேலும் சோதோம் ஜனங்கள் புசித்து, குடித்து வெறிப்பதிலும், பெண் கொள்வதிலும், கொடுப்பதிலும் மூழ்கியிருந்தார்கள். எங்கு உங்கள் பொக்கிஷம் இருக்குமோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும் என ஆண்டவர் கூறிகிறார். என் எதிர்காலத்தை நடத்துவதற்கு ஆபிரகாமின் தேவன் வல்லமையுள்ளவர் என்ற விசுவாசம் லோத்தின் மனைவிக்கு இல்லாமற் போயிற்று.

## அநித்தியமான உலகத்தின் மீது ஆசை

லோத்தின் குடும்பத்தை தேவன் தெரிந்து கொண்டு, தப்புவிக்க அனைத்து காரியங்களை நடப்பித்தபோதும் லோத்தின் மனைவி பின்னிட்டு பார்த்தாள். அவள் இருதயம் தேவனுக்கு நேராக இல்லை. சோதோமின் பாவங்கள், மனுப்புத்திரரின் உலக ஆசாபாசம் அவளை பின் திரும்ப வைத்தது. அவள் மனம் புதிதாக மாற்றப்படவில்லை. மேலும் புசிப்பதிலும், குடிப்பதிலும், வேசித்தனத்திலும் நிறைந்த சோதோம் மக்கள் மீதே லோத்தின் மனம் சென்றது. இன்றும் அநேகர் தேவபிள்ளைகளாக இருந்தும், அவர்களது இருதயமும் நிறைவும் எங்குள்ளது? தேவன் இன்றைக்கும் நம்மை தப்புவிக்கத் தெரிந்து கொண்டு கையைப் பிடித்து இழுத்து வந்தாலும் கூட நம்முடைய இருதயம் எங்கே உள்ளது? எப்படி உள்ளது? உள்ளத்தில் குடியிருந்த பொல்லாத நினைவுகள் பின்னாக திரும்பிப் பார்க்க வைக்கிறது. எனக்கன்பானவர்களே! கடைசிக் காலங்களில் நாம் வந்துள்ளோம். நம்மை ஆராய்ந்து பார்ப்போம்.

▸▸ லோத்தின் மனைவியைப் போல் கிருபையை இழக்காமல் பாதுகாப்போம். ▸▸ தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவோம். ▸▸ தேவனுடைய வார்த்தையில் விசுவாசம் கொள்வோம். ▸▸ அநித்தியமான உலகத்தின் ஆசைகள் விலக்கி கிறிஸ்துவுக்காக நாம் ஜீவனம் செய்வோம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது பரிசுத்தவான்கள் அனைவரோடுங்கூட வரும்போது, நீங்கள் நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாகப் பிழையற்ற பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கும்படி உங்கள் இருதயங்களை ஸ்திரப்படுத்துவாராக. (I தெசலோனிக்கேயர் 3:13)

# ஜெபிக்க வேண்டுகிறோம்...



- நம் தலைமுறையில் நம் 1 கோடி பீல் ஆதிவாசி மக்கள் நம் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள ஜெபியுங்கள்
- 7000 கிராமங்களில் 7000 ஊழியர்கள், 7000 சபைகளை, 7000 ஆலயங்களை எழுப்ப ஜெபியுங்கள்.
- தேவன் இதுவரை கொடுத்த 465 சுதேச ஊழியர்கள் குடும்பங்களுக்காகவும், தேவன் அவர்களை வல்லமையாக பயன்படுத்தவும், அவர்களை பாதுகாக்கவும் ஜெபியுங்கள்.
- ஷாலோம் திருமண்டலத்திற்காகவும், சபைகளுக்காகவும், சபை மூப்பர்களுக்காகவும், சபை விசுவாசிக்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- ஷாலோம் சேரிட்டி மிஷன் மூலமாக நடைபெறும் சமுதாயப்பணிகளுக்காவும், குறிப்பாக ஆதிவாசி சிறுபிள்ளைகள் மத்தியில் தேவன் எழுப்புதலை தரும்படியாகவும் ஜெபியுங்கள்.
- 2015க்குள்ளாக 10 லட்ச ஆத்துமாக்களை சந்திக்கும் திட்டத்திற்காகுவும், அதற்காக தேவன் எழுப்பிய 48 ஊழியர்களுக்காகவும், தேவன் அவர்களை இன்னும் வல்லமையாக பயன்படுத்தும்படியாகவும், இந்த திட்டத்தை நிறைவேற்ற முன்வந்த இயேசு விடுவிக்கிறார் ஊழியங்களுக்காகவும், அதை நடத்தி வருகிற சகோ. மோகன் லாசரஸ் அவர்களுக்காகவும் ஜெபியுங்கள்.
- கிராம ஊழியத்திற்கென்று ரூ.500 கொடுக்கக்கூடிய 1000 பேரை தேவன் எழுப்பும்படியாகவும், இந்த ஆண்டு இன்னும் பீல் மக்களுக்கு வழங்கப்பட வேண்டிய வேதாகமங்களுக்கான தேவைகள் சந்திக்கப்படவும், கிறிஸ்மஸ் கால தேவைகள் சந்திக்கப்படவும் ஜெபியுங்கள்.
- பீல் சுதேச ஊழியர்கள் குடும்ப முகாம் (நவம்பர் 8,9,10) (ஆனந்த், குஜராத்)
  - அனைத்து சுதேச ஊழியர்களும் புதிய தரிசனத்தையும், புதிய அபிஷேகத்தையும் பெற்றக் கொள்ளவும் ஜெபியுங்கள்.
  - தேவ செய்தி கொடுக்கிற ஊழியர்களை தேவன் வல்லமையாக பயன்படுத்தபடியாக ஜெபியுங்கள்.
  - அனைவருடைய பிரயாணங்கள், தங்குகிற வசதி, உணவு வசதிக்காக ஜெபியுங்கள்.
  - ஒலி, ஒளி அமைப்பு சாதனங்கள், கூடாரம், கூட்டம் நடைபெறுகிற இடங்களை தேவ ஆவியானவர் ஆளுகைச் செய்யும்படியாக ஜெபியுங்கள்.
  - கூட்டத்திற்கு தேவையான ரூ. 8 லட்சம் சந்திக்கப்பட ஜெபியுங்கள்.
  - கூட்டங்களுக்கு விரோதமாக செயல்படும் அந்தகாரங்கள் அழிக்கப்பட, கால சீதோஷணங்கள் சரியாய் அமைய ஜெபியுங்கள்.

## *ஷாலோம் ஜெபக் கூடுகைகள்*

தேவனுடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் நமது ஷாலோம் ஜெபக் கூடுகைகள் நமது ஷாலோம் ஆதரவாளர்களின் இல்லங்களில் நடைபெற்று வருகிறது. இறுதி நாட்களில் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்பட ஜெபம் மிகவும் அவசியம், எனவே தேவனுடைய திட்டத்தின்படி இந்த நாட்களில் ஜெபக்கூடுகைகள் **ஒவ்வொரு மாதமும்** நடைபெற்று வருகின்றன. இந்தக் கூடுகைகளில் தேசத்திற்காக, ஊழியங்களுக்காக, ஊழியர்களுக்காக, குடும்பங்களுக்காக, ஜெபித்து வருகிறோம். தற்பொழுது நடைபெற்றுவரும் ஜெபக் கூடுகைகளின் விபரங்களை கீழே கொடுத்துள்ளோம்.

மேலும் உங்கள் இல்லங்களிலும், உங்கள் பகுதிகளிலும் ஜெபக்கூடுகைகள் நடத்த நீங்கள் விரும்பினால் நமது ஷாலோம் ஊழியர் **சகோ. ரதீஸ்குமார்** அவர்களைத் தொடர்பு கொள்ளுங்கள். உங்களுக்கு ஆலோசனைகளையும், ஜெபக்குறிப்புகளையும் வழங்குகிறோம். தொடர்பு கொள்ள வேண்டிய ***செல் : 9600695598***

### *நவம்பர் மாதம் ஜெபக்கூடுகைகள் நடைபெறும் விபரங்கள்*

| தேதி | நாள் | நேரம் | இடம் / தொடர்பு |
|---|---|---|---|
| 04.11.2011 | முதல் வெள்ளி | மாலை 7 மணி | **சகோ. பாஸ்கர்,** ஸ்டேட் பேங்க் காலனி, தூத்துக்குடி – 2. செல் : 99940–25696 |
| 05.11.2011 | முதல் சனி | காலை 9.30 மணி | **Sharing Love Mission** தலைமை அலுவலகம், 5/168, கால்டுவெல் காலனி 3வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9345675468 |
| 10.11.2011 | 2ம் வியாழன் | மாலை 7 மணி | **சகோதரி. பாத்திமா மேரி,** M.G.R. நகர் (பாலம்) திருச்செந்தூர் ரோடு தூத்துக்குடி – 8. செல் : 77080–72120 |
| 19.11.2011 | மூன்றாம் சனி | மாலை 6 மணி | **சகோ. ஜெயக்குமார்,** 2/328, 5 வது தெரு (Extn.) P&T காலனி, தூத்துக்குடி – 8. செல் : 9843379994 |
| 30.11.2011 | கடைசி புதன் | மாலை 7 மணி | **சகோ. சாமுவேல் ஜெயராஜ்,** 48, அண்ணாநகர் 10வது தெரு, தூத்துக்குடி – 8. செல் : 9789569737 |

***எங்கள் தேவனைப்போல ஒரு கன்மலையும் இல்லை.*** 1. சாமு. 2:2

# ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களின் பணித்தள பார்வை...

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

சகோதரி. காருண்யா, (Mailing Department), சகோதரி. கீதா, (Accounts Department), சகோதரி. எலிசபெத் (Despatch Department) ஆகிய மூவரும் கடந்த அக்டோபர் மாதம் நமது ஷாலோம் பணித்தளங்களை பார்த்து திரும்ப தேவன் கிருபை செய்தார்.

**06.10.2011**, ராஜஸ்தான் வியாழக்கிழமை, பிஜல்பூர் பள்ளி விடுதி மாணவர்களையும், அங்கு நடைபெற்ற மருத்துவ முகாமையும் பார்வையிட்டோம். அதன் பின்பு ஹைஜாமால் கிராமத்தில் நடைபெற்ற மருத்துவ முகாமையும் மற்றும் ஜாலோத் மிஷன் வீட்டையும் பார்த்தோம்.

**07.10.2011**, மத்தியபிரதேசம் வெள்ளிக்கிழமை, விசல்பூர் கிராமத்தில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையிலும், அந்தர்வேலியா பகுதியில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையிலும், அங்கு நடைபெற்று வருகின்ற Compassion Project-யும் பார்வையிட தேவன் கிருபை செய்தார்.

**08.10.2011** குஜராத் சனிக்கிழமை, ஹிரோலா என்ற கிராமத்தில் சிறுவர்களுக்கான Children Project-யும் அதன்பிறகு, வாங்கோல் கிராம ஆலய ஆராதனையிலும் கலந்து கொண்டோம்.

**09.10.2011** குஜராத் ஞாயிற்றுகிழமை, கங்கேலா கிராம ஆலயத்தில் நடைபெற்ற ஷாலோம் மிஷன் ஞாயிறு சிறப்பு ஆராதனையிலும் பங்கு பெற தேவன் கிருபை செய்தார்.

நாங்கள் ஷாலோம் ஊழியக் காரியங்களைக் குறித்து அநேக சாட்சிகளைக் கேட்டிருந்தாலும், பணித்தளத்திற்கு சென்று நாங்கள் பீல் ஆதிவாசி விசுவாச மக்களை பார்த்தபோது மிகவும் மகிழ்ச்சியடைந்தோம். நாங்கள் ஆலய ஆராதனைக்கென்று சென்றபோது ஆலயத்திற்கு அருகில் வீடுகளே இல்லை. ஆனால் கொஞ்சநேரத்தில் எங்கிருந்தோ கூட்டம் கூட்டமாக மக்கள் பல கிலோ மீட்டம் தூரம் நடந்தே மலை உச்சியிலுள்ள ஆலயத்திற்கு தேவனை ஆராதிக்க வந்தது எங்களை மிகவும் ஆச்சரியப்பட வைத்தது. 48 சுதேச ஊழியர்கள் மூலம் நடத்தப்படுகிற அற்புத சுகமளிக்கும் ஆராதனையில் ஏராளமான விசுவாசிகளல்லாத பீல் மக்களும் கலந்து கொண்டனர். அங்கு அநேகர் சுகத்தை பெற்றதை நேரில் பார்த்து மகிழ்ந்து தேவனைத் துதிக்கிறோம்.

கடந்த 20 ஆண்டுகளில் **பேராயர். தேவதாஸ் அவர்களையும். சகோதரி. வஹிதா தேவதாஸ் அவர்களையும்** தேவன் எவ்வளவாய் பயன்படுத்தி வருகிறார் என்பதை பீல் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எழுப்புதல் மூலம் கண்டு கொண்டோம். 10 இலட்சம் ஆத்துமாக்கள் விரைவில் இரட்சிக்கப்படவும், ஊழியத்தின் தேவைகள் சந்திக்கப்படவும், சபைகள் கட்டப்படவும், ஊழியர்கள் எழுப்பப்படவும் பாரத்துடன் ஜெபித்து வருகிறோம். நீங்களும் ஜெபித்து ஊழியங்களை தாங்க முன்வாருங்கள். உங்களுக்குத் தெரிந்தவர்களுக்கும், உறவினர்களுக்கும் ஷாலோம் ஊழியங்களை அறிமுகப்படுத்துங்கள்.

அங்குள்ள விசுவாசிகள் முதியவர்கள், வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் அனைவரும் கர்த்தர் மேல் வைத்திருக்கிற விசுவாசத்தையும், அன்பையும் பார்த்தபோது , நாங்களும் தேவ பணிக்கென்று ஏதாவது செய்யவேண்டும் என்ற வாஞ்சையுடனும், ஷாலோம் ஊழியத்தின் மூலம் நம் பீல் மக்கள் இரட்சிப்புக்காக வைராக்கியத்துடனும், பாரத்துடனும் செயல்பட வேண்டும் என்ற முடிவுடனும் நாங்கள் பணித்தளத்திலிருந்து திரும்பினோம். எங்களது நீண்ட தூர பிரயாணத்தை பாதுகாத்து வழி நடத்தி வந்தமைக்காக தேவனைத் துதிக்கிறோம்.

**– Sis. கீதா, Sis. காருண்யா, Sis. எலிசபெத்**

(ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்கள்)

---

## *சபை மூப்பர்கள் மற்றும் ஊழியர்கள்*

## குடும்பக் கூடுகை

கடந்த செப்டம்பர் மாதத்தில் சபையின் மூப்பர்களுக்கான கூட்டங்கள் பகுதி பகுதியாக பிரிக்கப்பட்டு, குஜராத், இராஜஸ்தான், மத்திய பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களிலும் சுமார் 15 இடங்களில் நடைபெற்றது. இந்த கூட்டங்களில் சுமார் 2800 மூப்பர்கள் பங்கு பெற்று தேவ ஆசீர்வாதம் பெற்றார்கள்.

இந்த கூட்டங்களில் **பேராயர்.தேவதாஸ்** அவர்கள் சிறப்பு செய்தி வழங்கினார்கள். மட்டுமல்லாமல் சபையின் வளர்ச்சிக்காகவும், பீல் மக்கள் மத்தியில் விரைவில் எழுப்புதலை தேவன் தரும்படியாகவும், மிகவும் கருத்தோடும், கண்ணீரோடும் ஜெபம் ஏறெடுத்தார்கள். ஆராதனை வேளையிலும், ஜெப நேரத்திலும் பரிசுத்த ஆவியானவர் மிகவும் வல்லமையாய் இறங்கினார்.

வந்திருந்த அனைவரும் ஆத்தும பாரத்தை பெற்றது மட்டுமல்லாமல், ஷாலோம் ஊழியத்தை 20 ஆண்டுகள் நடத்தி வந்த தேவனுக்கு நன்றி கூறும் விதமாக, ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் 20 ஆத்துமாக்களை இயேசுவண்டை வழி நடத்துவோம் என்ற சவாலுடன் திரும்பிச் சென்றார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

---

## தேவனைத் துதிக்கிறோம்...

தூத்துக்குடி, பெரியநாயகிபுரம் CSI தேவாலயத்தில், கடந்த **02.10.2011** ஞாயிற்றுக்கிழமை துதி ஆராதனையில் நமது ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர் சகோ. ஜான்சன் ஜெபராஜ் அவர்கள் பாடல் வேளையை நடத்தினார்கள். அதன்பின் நமது ஷாலோம் பணித்தளத்திலிருந்து வந்திருந்த மூன்று சுதேச ஊழியர்கள் ஒரு சிறப்பு பாடல் பாடி தங்கள் சாட்சிகளை பகிர்ந்து கொண்டார்கள். நமது பேராயர் **Rt.Rev.Dr.V. தேவதாஸ்** அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது.

மேலும் இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் Rev. P. ஆபிரகாம் பீற்றர் அவர்களுக்கு ஷாலோம் ஊழியத்தின் சார்பாக நன்றி தெரிவித்து, தேவனைத் துதிக்கிறோம்.

# ஷாலோம் மூப்பர் கூடுகை - 2011



ஆராதனை வேளை



செய்திவேளையில் Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்கள்



பீல் மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபம்



கூடியிருந்த மூப்பர்கள்

# ஷாலோம் தலைமை அலுவலக ஊழியர்களின் பணித்தள வருகை



ஹிரோலா (குஜராத்) கிராம சபையில் விசுவாசிகளுடன்




ஜாலோத் (குஜராத்) மிஷன் பங்களாவில்



விசல்பூர், (ம.பி.) கிராம சபை ஆராதனையில்




கங்கேலா (குஜராத்) கிராம சபை ஞாயிறு ஆராதனையில்

# வாலிபர் முகாம் - போபால், மத்தியப்பிரதேசம்


கூடியிருந்த வாலிபர்கள்


எழுப்புதல் செய்தியளிக்கும்
Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்கள்

# மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனை - கடைசிக்கால அறுவடை ஊழியங்கள், நாகர்கோவில்


ஊழியர்களை அறிமுகப்படுத்தி வாழ்த்திய,
Pr. . கேபிரியல் ஜேம்ஸ் அவர்கள்


தங்கள் சாட்சிகளை பகிர்ந்து கொள்ளும்
நான்கு சுதேச ஊழியர்கள்

# பயணம் CSI தேவாலயத்தில் நடைபெற்ற வாலிபர் கூடுகை


வாலிபர்களுக்கு கதைகள் கூறி தேவ செய்திளிக்கும்
சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ் அவர்கள்


கூடியிருந்த வாலிபர்கள்

# பயணம் CSI தேவாலயத்தில் நடைபெற்ற சிறப்பு கூடுகை


அறிமுகம் செய்து ஜெபிக்கும்
சபை போதகர் Rev. விஜயகுமார் அவர்கள்


தேவ செய்திளிக்கும்
சகோ. அற்புதராஜ் மார்காஷிஸ் அவர்கள்

## "VISION INDIA 2011" *வாலிபர் முகாம்*

அன்புள்ள பேராயர் தேவதாஸ் அவர்களுக்கு,

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்.

மத்திய பிரதேசத்திலுள்ள போபாலில் நடைபெற்ற **"VISION INDIA 2011"** வாலிபர் பயிற்சி முகாமில் கலந்து கொண்டு நல்ல போதனைகளை கொடுத்திட உங்களது விலையேற பெற்ற நேரத்தை எங்களுக்காக தியாகத்தோடு கொடுத்தமைக்கு மிக்க நன்றி கூறுகிறோம். உங்களுடைய செய்தி முகாமில் கலந்து கொண்ட 1000–க்கும் அதிகமான மாணவர்களுக்கு மட்டுமின்றி, போதகர்களுக்கும், முகாமை ஒழுங்கு செய்த தலைவர்களுக்கும் மிகவும் ஆசீர்வாதமாக இருந்தது. நாங்கள் அனைவரும் அதிகமாக உற்சாகப்படுத்தப்பட்டுள்ளோம். இந்த பயிற்சி முகாமின் விளைவாக 335 வாலிபர்கள் முழுநேர பணிக்கும், 376 வாலிபர்கள் பகுதிநேர பணிக்கும் தங்களை அர்ப்பணித்துள்ளார்கள். தேவனுக்கே மகிமை!

**Bro. Vijay Mohod, Vision India**

## ஷாலோம் சுதேச ஊழியர் பிரதிஷ்டை ஆராதனை


நாகர்கோவிலிலுள்ள பாஸ்டர். காபிரியேல் ஜேம்ஸ் (கடைசி கால அறுவடை ஊழியங்கள்) அவர்கள் மூலமாக ஷாலோம் 6 பீல் சுதேச ஊழியர்களை தாங்கி வந்தார்கள். 02.10.2011 அன்று மேலும் நான்கு சுதேச ஊழியர்களை (**Mr. Bharat Damor,** Dholakakra, Gujarat; **Mr. Rakesh N. Bhuriya,** Chottagosaliya, Madhya Pradesh, **Mr. Veji K. Charpota,** Dungripada, Rajesthan; **Mr. Nanalal Damor,** Nal, Rajesthan) தாங்க முன் வந்து பிரதிஷ்டை செய்தார்கள். அன்று நான்கு ஊழியர்களும் தங்களுடைய சாட்சியை பகிர்ந்து கொண்டார்கள்.

சகோ. சாம் குணசீலன் அவர்கள் ஊழியங்களை குறித்து அறிமுகம் செய்து ஊழியர்களின் சாட்சியை மொழிபெயர்ப்பு செய்தார்கள். மேலும் ஷாலோம் பணித்தளத்தில் இரண்டு ஆலயங்கள் கட்டுவதற்காக **பாஸ்டர். காபிரியேல் ஜேம்ஸ்** அவர்கள் **ரூ. 2 லட்சம்** காணிக்கை கொடுத்தார்கள். நம் ஷாலோம் ஊழியங்களை நேசித்து தாங்குகிற **பாஸ்டர். காபிரியேல் ஜேம்ஸ்,** (கடைசி கால அறுவடை ஊழியங்கள்) அவர்களுக்கு ஷாலோம் ஊழியத்தின் சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். தேவனுக்கே மகிமை உண்டாவதாக.

### தேவனைத் துதிக்கிறோம்...

கடந்த 02.10.2011 அன்று மார்த்தாண்டம் பகுதி பயணம் CSI தேவாலய ஞாயிறு ஆராதனையில் நமது ஷாலோம் ஊழியத்தின் சார்பில் **சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ்** அவர்கள் செய்தியளிக்க தேவன் கிருபை செய்தார். மேலும் ஆரதனைக்குப்பின் நடைபெற்ற வாலிபர் சிறப்புக் கூடுகையிலும், அன்று மாலை ஆலயத்தில் வைத்து சபையாருக்காக நடைபெற்ற சிறப்புக் கூடுகையிலும் சகோ. அற்புதராஜ் மர்காஷிஸ் அவர்கள் தேவ செய்தியளித்தார்கள். தேவ நாமம் மகிமைப்பட்டது.

மேலும் இந்த வாய்ப்பினை வழங்கிய சபை போதகர் Rev. விஜயகுமார் அவர்களுக்கு ஷாலோம் ஊழியங்களின் சார்பில் நன்றி தெரிவித்து, தேவனைத் துதிக்கிறோம்.




# வேதம் வழங்குவோம் வாருங்கள்

***பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு***

நம் ஷாலோம் மிஷனெரி இயக்கத்தின் மூலமாக தேவன் பீல் ஆதிவாசி மக்களை இரட்சித்து அனுதினமும் சபையில் சேர்த்து வருகிறார். இவர்கள் தங்களின் பாவ வாழ்க்கையை விட்டு மனம் திரும்பி தேவனுக்காக வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார்கள். இப்போது இந்த மக்கள் எழுதவும் படிக்கவும் செய்கிறார்கள். இந்த மக்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் வளர்ச்சிக்காக குஜராத்தி, ஹிந்தி வேதாகமங்கள் வாங்கிக் கொடுக்கவேண்டியது நமது கடமையாகும்.

கடந்த 2010 ம் ஆண்டில் இந்திய வேதாகமச் சங்கம் குஜராத், அகமதாபாத் கிளை மூலமாக சுமார் 7 ஆயிரம் வேதப்புத்தகங்கள் வாங்கி நமது பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்குக் கொடுக்க தேவன் கிருபை செய்துள்ளார். குஜராத் மாநிலத்தில் அதிக வேதப்புத்தகங்கள் விநியோகம் செய்தமைக்காக ஷாலோம் ஊழியத்திற்கு இந்திய வேதாகமச் சங்கம் **"சிறப்பு விருது"** கொடுத்து கௌரவப்படுத்தியுள்ளது. அதற்காக தேவனைத் துதிக்கிறோம். உங்களில் பலர் கடந்த ஆண்டில் பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வேதாகமம் வாங்கிக் கொடுக்கும்படியாக உதாரத்துவமான காணிக்கை அளித்துள்ளீர்கள். இதற்காக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

2011ஆம் ஆண்டு முடிவதற்குள்ளாக 10000 (ஹிந்தி & குஜராத்தி) வேதாகமங்கள் தேவைப்படுகின்றன. ரூ. 80 வீதம் 10000 வேதாகமங்களுக்கு நிதி உதவித் தேவைப்படுகிறது. இதில் சுமார் 3050 வேதாகமங்களுக்கு நிதி உதவி கிடைத்துள்ளது. இதில் முதற்கட்டமாக கடந்த 18.10.2011 அன்று 1500 வேதாகமங்கள் நமது பணித்தளங்களில் வழங்க தேவன் கிருபை செய்தார். மீதி 6950 வேதாகமங்களுக்கு நிதி உதவி ரூ. 5,56,000/– கிடைக்கும்படியாக பாரத்துடன் ஜெபியுங்கள். மேலும் கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவுவாராகில், உங்களால் முடிந்த வேதாகமங்களை வாங்கிக் கொடுக்கலாம். உங்கள் நண்பர்களையும், உறவினர்களையும் வாங்கிக் கொடுக்கச் சொல்லலாம். அதற்கான காணிக்கையை **SHARING LOVE MISSION** என்ற பெயரில் **D.D., M.O.** அல்லது **Cheque** மூலமாகவோ தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி இந்த தேவ திட்டத்தை நிறைவேற்றலாம். கர்த்தர்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக!

---

LojRÚûPVúYRm Ïû\Yt\Õm, BjÕUôûY
E«ol©d¡\ÕUô«Úd¡\Õ;
LojRÚûPV Nôh£Nj§VØm,
úTûRûVOô²Vôd Ï¡\ÕUô«Úd¡\Õ. சங்கீதம் 19:7

# பீல் ஆதிவாசி விசுவாசிகளுக்கு வழங்கப்பட்ட வேதாகமங்கள்



வேதாகமங்களுக்கான சிறப்பு ஜெபம்



வேத வசன பகிர்வு வேளை



ஊழியர்களிடம் வேதாகமங்களை வழங்கும்
Rt.Rev.Dr.V. தேவதாஸ் அவர்கள்



ஊழியர்களிடம் வேதாகமங்களை வழங்கும்
சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள்



## ஷாலோம் – இயேசு விடுவிக்கிறார் – 10 இலட்ச ஆத்துமாக்கள் அறுவடைத் திட்டம் சுகமளிக்கும் கூட்டங்களில் நடைபெற்ற அற்புத சாட்சிகளில் சில



பெயர் : **காந்தா பேன்**
கிராமம் : கேடாவட், இராஜஸ்தான், வயது : 28

கடந்த 8 மாதமாக என்னால் நடக்கமுடியவில்லை. மிகவும் கஷ்டப்பட்டு நொண்டி, நொண்டி தான் நடக்க முடிந்தது. அநேக மருத்துவங்கள் பார்த்தும் சரியாகவில்லை. இந்நிலையில் கடந்த 23.09.2011 அன்று பொட்டேலியா கிராமத்தில் உள்ள ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் பங்கு பெற்றேன். ஆராதனையில் போதகர் வியாதியஸ்தர்களுக்காக சிறப்பு ஜெபம் ஏறெடுத்தார். அந்த நேரம் எனது கால்களில் தேவனுடைய வல்லமை இறங்கியது. உடனே எனது கால்கள் பெலனடைந்தது. இப்போது என்னால் நன்றாக நடக்க முடிகிறது. தேவனுக்கே மகிமை உண்டாவதாக!



பெயர் : **நட்வர்பாய்**
கிராமம் : சூடாதா, இராஜஸ்தான், வயது : 25

கடந்த ஏழு நாட்களாக எனது இரண்டு முழங்கால்களும் மடக்கமுடியாமல், உட்கார மிகவும் கஷ்டப்பட்டேன். 23.09.2011 அன்று பொட்டேலியா கிராமத்திலுள்ள ஷாலோம் சபையில் நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனையில் பங்கு பெற்றேன். ஆராதனையில் போதகர் வில்சன் சங்காடா அவர்கள் வியாதியஸ்தர்களுக்காக விஷேசித்த ஜெபம் ஏறெடுக்கும்போது, தேவன் என்னைத் தொட்டு அற்புத சுகத்தினைத் தந்தார். இப்போது என்னால் முழங்காலை மடக்கவும், நன்றாக உட்காரவும் முடிகிறது. எனக்கு சுகம் கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்!



பெயர் : **சந்துபேன் டோடியார்**
கிராமம் : அகோரியா, இராஜஸ்தான், வயது : 34

கடந்த 7 ஆண்டுகளாக நான் நிமிர முடியாமல் கூனியாக கம்பு வைத்து நடந்து கொண்டிருந்தேன். அநேக மருத்தவர்களைப் பார்த்து ரூ. 15 ஆயிரத்திற்கும் அதிகமாக செலவு செய்தும் பலனில்லை. கடந்த 23.09.2011 அன்ற டெப்ரி கிராம சபையில் நடைபெற்ற ஷாலோம் சுகமளிக்கும் ஆராதனையில் கலந்து கொண்டேன். அங்கு போதகர் காளியா பாபோர், தேவ செய்தியளித்து வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தபோது, தேவன் என்னைத் தொட்டு அற்புத சுகத்தைக் கொடுத்தார். என்னால் இப்போது கம்பு இல்லாமல் நிமிர்ந்து நடக்க முடிகிறது. சுகம் கொடுத்த தேவனுக்கே மகிமை!



## ஷாலோம் அற்புதத்தின் நாளில் நடைபெற்ற அற்புத சாட்சிகளில் ஒரு சில...



பெயர் : **மிட்டாபாய் டாமோர்**
கிராமம் : புரக்குவா, குஜராத், வயது : 45

நான் கடந்த 8 மாத காலமாக சர்க்கரை நோயினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். எத்தனையோ மருத்துவமனைக்குச் சென்றும் பலனில்லை. ஆகையால் மந்திரவாதிகளிடம் சென்று ஆடுகள் மற்றும் கோழிகளை பலியிட்டு சுமார் 25 ஆயிரம் ரூபாய் செலவு செய்தேன், ஆனாலும் பலனில்லை. இறுதியாக மரிக்கும் தருவாய்க்குச் சென்றுவிட்டேன். அனைவரும் நான் மரித்துவிடுவேன் என நினைத்து என் மீது துணிகளை போட்டுவிட்டார்கள். அந்த சமயத்தில் புரக்குவா கிராம சபையில் 30.09.2011 அன்று நடைபெற்ற சுகமளிக்கும் ஆராதனைக்கு என்னை தூக்கிச் சென்றார்கள். அங்கே சுதேச ஊழியர் கோர்சிங் டாமோர் அவர்கள் என் மீது கை வைத்து, எண்ணெய் பூசி ஜெபித்தார். அந்த நேரத்தில் தேவன் என்னை அற்புதமாக குணமாக்கினார். தற்போது நான் நல்ல உடல்நிலையில் உள்ளேன். தேவனுக்கே மகிமை உண்டாவதாக!





பெயர் : **ராமுடிபேன்**
கிராமம் : பான்டிபார், மத்தியப்பிரதேசம்

எனது மகள் தொல்லிக்கு 3 வயதாகிறது. கடந்த 1 வருடமாக அதிகமாக சுகவீனமடைந்து காணப்பட்டாள். என்ன வியாதி என்றே மருத்துவர்களால் கண்டு பிடிக்க முடியவில்லை. இறுதியில் நடக்க முடியாதபடி ஆகிவிட்டது. நான் என்னிடமிருந்த 4 கிலோ வெள்ளியை விற்று ரூ. 50 ஆயிரத்திற்கும் மேலாக மருத்துவர்களுக்கும், மந்திரவாதிகளுக்கும் செலவு செய்தேன். ஆனாலும் எந்த பலனுமில்லை. இறுதியாக 30.09.2011 அன்று நவாப்பாடா கிராம சபையில் நடைபெற்ற ஷாலோம் அற்புதத்தின் நாள் ஆராதனையில் கலந்து கொண்டு எனது மகளுக்காக கண்ணீருடன் ஜெபித்தேன். அப்போது சபையாரும், போதகரும் எனது மகளுக்காக பாரப்பட்டு ஜெபித்தனர். அந்த நேரத்திலே தேவன் அற்புதம் செய்தார். ஆம் எனது மகள் எழுந்து நடக்க ஆரம்பித்துவிட்டாள். அற்புதத்தின் தேவனுக்கே மகிமை உண்டாவதாக!

# கிறிஸ்மஸ் நாட்களில் பீல் மக்களை நினைப்போம்



நமக்காய் பூமியிலே பாலகனாய் பிறந்து, அற்புதங்களையும் அதிசயங்களையும் இந்த பூமியிலே செய்து, பாடுபட்டு, சிலுவையிலே மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளை நாம் கொண்டாடுவதே கிறிஸ்மஸ் தினமாகும்.

வருடந்தோறும் கிறிஸ்மஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்மஸ்-ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை கிறிஸ்துமஸ் தினங்களில் கொடுத்து வருகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ. 8 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1000/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு குறைந்தது ரூ. 500/- அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்மஸ் வெகுமதியாகக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.


இந்த வெகுமதி காணிக்கைகளை நவம்பர் மாதத்திற்குள்ளேயே அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் அன்பளிப்புகளை கிறிஸ்மஸ்க்கு முன்பாக கொடுக்க உதவியாக இருக்கும்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



**இந்த பீல் மக்களின்**
**சந்தோஷத்தோடு**
**கிறிஸ்மஸ்-ஐ வரவேற்போம்!**
**தேவ ஆசீர்வாதத்தைப்**
**பெற்றுக் கொள்வோம்!!**

# நினைவுப்படுத்துகிறோம்......



அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! இந்த அக்டோபர் மாதத்தில் நுழைந்திருக்கும் நாம் இந்த ஆண்டு வரப்போகின்ற கிறிஸ்மஸைக் கொண்டாட நாம் ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். மேலும் நமது பணித்தளங்களில் நாம் தாங்கி வரும் பீல் ஆதிவாசி விசுவாசிகள் மற்றும் சுதேச ஊழியர்களின் பிள்ளைகள் நன்றாக படித்து வருகிறார்கள்.

நாம் அவர்களுக்கு கிறிஸ்மஸுக்காக ஏதாவது செய்தாக வேண்டும். ஆகவே நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசி பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்த காணிக்கையை ஆதிவாசி பிள்ளைகளின் கிறிஸ்மஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம்.

பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக கொடுக்கும் தொகையை எங்கள் பிரதிநிதிகள் மூலமாக கொடுக்கலாம்.

அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்து கொடுக்கலாம் அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHARING LOVE MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், **உண்டியலின் எண்ணையும்** எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறேன்.

உங்களுக்கு உண்டியலைத் திறக்க சாவி **(Key)** வேண்டுமானால் **9345675468** – இந்த செல் நம்பருக்கு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம்.

### ஷாலோம் கிளை அலுவலகங்கள்

| Bro. B. Ebenezer Daniel | Bro. G. Selvadurai |
|---|---|
| New no:38 Old No:76A, 2nd Floor, 3rd St, Gill Nagar, Choolaimedu, Chennai, Tamil Nadu 600 094 | Kalikal House, Near A.G.Church Gnaramvilai, Pacode.P.O K.K Dist, Tamil Nadu 629168 |
| Cell : 934 44-75468 | Cell : 94876-89869 |

# SHALOM CHARITY MISSION
## ஷாலோம் சேரிட்டி மிஷன்

தேவனுடைய பெரிதான கிருபையால் கடந்த 19 ஆண்டுகளாக தேவன் தந்த Sharing Love Mission (அன்பு பகிர்வு இயக்கம்) மூலமாக 1 கோடி பீல் ஆதிவாசி மக்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கவும், சீஷர்களாக்கவும், ஊழியர்களை எழுப்பவும், சபைகளைக் கட்டவும் தேவன் கிருபை தந்து, ஆயிரம் ஆயிரமாக ஆசீர்வதித்து வருகிறார்.

அதே வேளையில் நம் விசுவாசக் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வி வசதிக்காக பள்ளிக்கூடங்கள், விடுதிகள் கட்டப்படவும் மற்றும் சுகாதார மருத்துவத் திட்டங்களும், பயிற்சி முகாம்களும் நடத்தப்படவும் வேண்டும். மேலும் குடிநீர் வசதி செய்து கொடுத்தல், சமுதாய மேம்பாட்டுத் திட்டங்கள், பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் போன்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். நமக்கு வரும் நிதி உதவியில் மூன்றில் ஒரு பங்கு மேற்கண்ட திட்டங்களுக்காகவே செலவிடப்படுகின்றது. இன்னும் வரும் காலங்களில் மிக அதிக அளவில் இவைகள் நிறைவேற்றப்பட வேண்டும். குறிப்பாக சுமார் 10 ஆயிரம் பீல் ஆதிவாசி மாணவர்களுக்கு **“கல்வி அறிவு வளர்ச்சி”** திட்டங்களை செயல்படுத்த வேண்டும்.

இதற்காக **Shalom Charity Mission** – என்ற இயக்கம் பதிவு செய்யப்பட்டு சமுதாய முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. **Sharing Love Mission** சுவிசேஷப் பணி மற்றும் சபை காரியங்களை மட்டும் கவனித்து செயல்படும். **Shalom Charity Mission** – மற்ற சமுதாய முன்னேற்ற பணிகளையும், குழந்தைகளின் கல்விப் பணிகளையும் கருத்தாகத் திட்டமிட்டு, நிதிகளை சேகரித்து திறம்பட செயல்படும். Hostel பணி, Education பணி, Literature Fund மற்றும் இதர சமூக சேவை பணிகளுக்கு நிதி உதவி செய்யும்போது **Shalom Charity Mission** – என்ற பெயருக்கு அனுப்ப மிக அன்பாய் கேட்கிறோம்.

| | | |
|---|---|---|
| வங்கி கணக்கு | : | **SHALOM CHARITY MISSION** |
| **Axis** வங்கி கணக்கு எண் | : | **105010100096779 - Tuticorin Branch** |
| **TMB** வங்கி கணக்கு எண் | : | **174100710400061 - Tuticorin Branch** |

**குழந்தை ஆதரவாளர்கள் கவனத்திற்கு....**

*நீங்கள் அனுப்பும் குழந்தை ஆதரவுத் தொகையை* **Shalom Charity Mission** – என்ற பெயருக்கே **D.D. or Cheque or M.O.** மூலமாகவோ அனுப்ப மிகவும் தாழ்மையாக கேட்கிறோம். இவ்வாறு நீங்கள் அனுப்பும் போது நாங்கள் அதை **Shalom Charity Mission** - கணக்கில் கொண்டு வந்து, ஆதிவாசி சிறுவர்களுக்கென்று பயன்படுத்த உதவியாக இருக்கும்.

மேலும் நீங்கள் வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும்போது மறவாமல் எங்களுக்கு தெரியப்படுத்த அன்புடன் கேட்கிறோம். இல்லையென்றால் காணிக்கை செலுத்தியது யார் என்பது தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

## நமது ஷாலோம் ஊழியங்களைக் குறித்து தூத்துக்குடி – நாசரேத் திருமண்டல பேராயர்
## Rt. Rev. Dr. J.A.D. ஜெபச்சந்திரன் அவர்கள் கூறுவது...

Jesus, the humble suffering servant is the powerful conquering king and Judge.

Church of South India

# THOOTHUKUDI - NAZARETH DIOCESE




The Rt.Rev. Dr. J.A.D. Jebachandran,
B.Sc.,M.A.,B.D.,D.D.,

Bishop of Thoothukudi - Nazareth Diocese
Chairman TND & Manager, TND Colleges
✆ (Off.) 0461 - 2345430, (Res.) 0461 - 6536555
Tele Fax : 0461 - 2346911
e-mail : bishoptndone@yahoo.com

Bishop's House,
111/32-T, State Bank Colony,
Thoothukudi - 628 002,
Tamilnadu, South India.
web: www.csitnd.org


Ref : GNL –(i)H / 2011 - 12 12.10.2011

அன்புக்குரியவர்களே!

இறைமைந்தனாம் இயேசு கிறஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களுக்கு அன்பின் வாழ்த்துக்கள். இக்கடிதத்தின் மூலம் உங்களை தொடர்பு கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

**Bp.V.** தேவதாஸ் அவர்களுக்கு தரிசனத்தில் தேவன் ஒரு ஜாதி இனமக்களை தருவேன் என்ற வாக்கின்படி அழைத்தார். அதன்படி **Bp.V.** தேவதாஸ் மற்றும் அவர்கள் மனைவி வஹிதா தேவதாஸ் அவர்களும் இணைந்து வடஇந்தியாவில் குஜராத், மத்தியபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மூன்று மாநிலங்களில் வாழும் சுமார் 1கோடிக்கும் அதிகமான பீல் ஜாதி மக்கள் மத்தியில் 1991ஆம் ஆண்டு பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல்படி **"**அன்பு பகிர்வு இயக்கம்**"** **(Sharing Love Mission)** ஊழியத்தை ஆரம்பித்தனர்.

இந்த மிஷனெரி குடும்பத்தின் 20வருட அயராத தேவபணியினால் குஜராத், மத்தியபிரதேசம் மற்றும் ராஜஸ்தான் ஆகிய மாநிலங்களில் பீல் ஆதிவாசி மக்கள் மத்தியில் சுவிஷேசம் அறிவிக்கப்பட்டு சுமார் 620 சபைகள் உருவாக்கப்பட்டு, அதில் 205 ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும் இப்பணியில் 465 சுதேச ஊழியர்கள் உருவாக்கப்பட்டு, அதில் 77 பீல் சுதேச ஊழியர்கள் **B.Th.,** கற்றுத் தேறி போதர்களாக பிரதிஷ்டை செய்யப்பட்டு, வடஇந்தியாவில் ஷாலோம் திருமண்டலமாக உருவாக்கப்பட்டுள்ளது. இதுவரை 1 இலட்சத்துக்கும் அதிகமான ஆத்துமாக்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. மேலும் சபைகளுக்கு வரும் 30,000 விசுவாசிகளின் பிள்ளைகளுக்கென்று ஓய்வுநாள் பள்ளி வகுப்புகளும், மற்றும் ஆண்டுக்கொரு முறை விடுமுறை வேதாகபள்ளி வகுப்புகளும் நடைபெற்று வருவதாக அறிகிறோம். அதில் 1600 பீல் ஆதிவாசி குழந்தைகளை 6 விடுதிகளிலும், இராஜஸ்தானில் உள்ள பள்ளியிலும் தங்க வைத்து சிறந்த கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது. இன்னும் 10,000 சிறுவர்களுக்கு கல்வியை அளிக்கவும், மேலும் 2015ம் ஆண்டிற்குள் 10 இலட்ச ஆத்துமாக்களை கிறிஸ்துவின் மந்தையில் இணைத்து, 2000 சபைகளையும் உருவாக்கும் உன்னத தரிசனத்துடன் இந்த ஷாலோம் ஊழியம் செயல்பட்டு வருகிறது.

இத்தரிசனத்துடன் செயல்பட்டு வரும் ஷாலோம் ஊழியத்தை நமது தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலத்தின் மூலமாக அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறேன். மேலும் உங்களைத் தேடிவரும் "அன்பு பகிர்வு இயக்கம்" ஊழியர்களுக்கு முழு ஒத்துழைப்பு தந்து அவர்களின் ஊழியங்களை நமது திருச்சபை மற்றும் நமது கல்வி நிறுவனங்களில் ஜெபித்து தாங்கி உற்சாகப்படுத்தவும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.



கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

"அனுப்பப்படாவிட்டால் எப்படிப் பிரசங்கிப்பார்கள்? சமாதானத்தைக் கூறி, நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகானவைகள்." ரோமர் 10 : 15

கிறிஸ்துவின் பணியில்

(அருட்பெருந்திரு அறிவர் சா அ த ஜெபச்சந்திரன்)
பேராயர்
தூத்துக்குடி நாசரேத் திருமண்டலம்

விடுதலை நிலையில் வாழ்வதற்கென அழைக்கப்பட்டீர்கள். ...அன்பினால் ஒருவருக்கொருவர் தொண்டு செய்யுங்கள். கலாத்தியர் 5:13

*You are called to be free, ...Let love make you serve one another. Galatians 5:13*

# ஷாலோம் மருத்துவ முகாம் - 2011



நோயாளிகளை பரிசோதிக்கும் Dr. Inba அவர்கள்



பிஜல்பூர் பள்ளி மாணவர்களை
பரிசோதிக்கும் Dr. Abel அவர்கள்



மருந்துகள் வழங்கப்படுகின்றன



சிகிச்சைக்காக காத்திருக்கும் பீல் ஜனங்கள்

# ஷாலோம் ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம் - 2011



பயிற்சியளிக்கும் Dr. Abel அவர்கள்



பயிற்சி பெற்றோருக்கு சான்றிதழ் வழங்கும்
Mrs. Jolly Abel அவர்கள்



பயிற்சியின்போது



பயிற்சி பெற்ற குழுவினர்

# ஷாலோம் மருத்துவ முகாம் - 2011

**(03.10.2011 முதல் 07.10.2011 வரை)**

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் கடந்த அக்டோபர் மாதம் 3-ம் தேதி முதல் 7-ம் தேதி வரைக்கும் பணித்தளத்தில் ஷாலோம் மருத்துவ முகாம் நடைப்பெற்றது. இம்முகாமிற்கு சென்னையிலிருந்து Dr.Abel Rajaratnam, Dr.Jolly Abel, Dr.Inbakumar, Sis.Vanaja, Sis.Angel, Sis.Agnes & CBN-ல் இருந்து Bro.Ashwin அவர்கள் வந்து 5 நாட்கள் சிறப்பு மருத்துவப் பணி மற்றும் மருத்துவ பயிற்சிக் கொடுத்தார்கள். இதில் குஜராத்தில் உள்ள Dr.Swapnil அவர்களும் Dr. Dipesh அவர்களும், நமது அலுவலக ஊழியர்களும் மற்றும் நமது விசுவாசி Nurse-களும் வந்து உதவிப் பணி செய்தார்கள். எல்லாருக்காகவும் தேவனுக்கு நன்றி செலத்துகிறோம்.

**"சிறுமைப் பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்"** என்ற வசனத்தின்படி தேவன் தாமே அவர்கள் யாவரையும் ஆசீர்வதிப்பாராக!

03-10-2011 அன்று குஜராத்திலுள்ள தாகோத் மற்றும் ஜாலோத் வட்டாரத்திலுள்ள மக்களுக்கென்று மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் 345 பேர் பங்கு பெற்று மருத்துவ சிகிச்சைப் பெற்றனர். 04-10-2011 அன்று மத்திய பிரதேசத்திலுள்ள மேக் நகரில் உள்ள கத்தோலிக்க மருத்துவமனையில் மருத்துவ முகாம் நடைப்பெற்றது. இம்முகாமில் 465 பேர் பங்கு பெற்றனர். 05-10-2011 அன்று மத்திய பிரதேசத்தில் உள்ள அலிராஜ்பூர் மாவட்டத்திலுள்ள ஜோபட்-ல் நடைபெற்ற மருத்துவ முகாமில் சுமார் 160 பேர் பங்கு பெற்றனர். அதேபோல், 06-10-2011 அன்று இராஜஸ்தான் மாநிலத்தின் பான்ஸ்வாடா மாவட்டத்தில் உள்ள ஜெமாலில் நடைபெற்ற மருத்துவ முகாமில் 185 பேர் பங்கு பெற்றனர். மேலும், அதே நாளன்று Shalom Bijalpur School மாணவ, மாணவியருக்கென்று சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. அதில் ஆசிரியர்கள் உட்பட 325 பேர் பங்கு பெற்றனர்.

07-10-2011 அன்று இராஜஸ்தானில் உள்ள கோய்காவில் நடைபெற்ற மருத்துவ முகாமில் சுமார் 310 பேர் பங்கு பெற்றனர். அதேபோல், குஜராத்திலுள்ள சோட்டா உதய்ப்பூரில் சன்னாடா என்ற கிராமத்தில் நடைபெற்ற மருத்து முகாமில் 380 பேர் பங்கு பெற்றனர். இம்முகாம்களில் பங்கு பெற்ற அனைத்து குழந்தைகள், சிறியோர், பெரியோர், முதியோர் அனைவருக்கும் இலவசமாய் மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு, இலவசமாய் மருந்துகள் வழங்கப்பட்டது.

இந்த நாட்களில் நடைபெற்ற மருத்துவ முகாமில் மொத்தம் 2170 பேர் சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். இந்த 5 நாட்களும் தேவனுடைய கரம் எங்களோடு இருந்ததை உணர்ந்து அவருக்கு நன்றி செலுத்துகிறோம்...

# ஷாலோம் ஆரம்ப சுகாதார பயிற்சி முகாம் – 2011

## (ஷாலோம் சுதேச ஊழியர்களுக்கு மற்றும் ஊழியக்காரிகளுக்கு)

## (03.10.2011 முதல் 07.10.2011 வரை)

தேவனுடைய இரக்கத்தினால், ஒவ்வொரு வருடமும், வருடத்திற்கு 2 முறை நமது சுதேச ஊழியர்கள் மற்றும் ஊழியக்காரிகளுக்கும், விசேஷித்த மருத்துவ பயிற்சி முகாம் நடத்தப்பட்டுள்ளது. இதுவரை மொத்தம் 10 Batches- களுக்கு ஊழியர்களும், ஊழியக்காரிகளும் சேர்ந்து 470 பேர் பயிற்சி பெற்றிருக்கிறார்கள்.

இந்த வருடத்தில், இது இரண்டாவது முறையாக சுதேச ஊழியர்களின் மனைவிமார்களில் சுமார் 40 பேருக்கு இந்த மருத்துவ ஆரோக்கிய முகாம் 03-10-2011 முதல் 07-10-2011 வரை 5 நாட்கள் நடத்தப்பட்டது. இந்த பயிற்சியில், ஆரோக்கியமான வாழ்வு, அரசு மூலம் நடத்தப்படுகிற Primary Health Centre-ன் வேலைகள் என்ன? எப்படி இந்த பயனை அடைவது? மற்றும் Village Health Nurse (VHN) அவர்களுடைய வேலை என்ன? என்றும், அவர்கள் மூலம் நமக்குக் கிடைக்கிற நன்மைகள் பற்றியும், மிகவும் தெளிவாக பயிற்சி கொடுக்கப்பட்டதினிமித்தம் ஊழியக்காரிகள் விழிப்புணர்வு அடைந்தார்கள்.

மட்டுமல்லாமல், பெண்கள் கர்ப்பமாயிருக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய காரியங்கள், Safe Delivery, குழந்தைகளைப் பராமரிப்பது, Immunization, U/5 Children Care, வியாதிகளைப் பற்றியும், வியாதி வருவதைத் தடுக்கும் முறைகளையும், First Aid காரியங்கள், HIV விழிப்புணர்வு, சுத்தம் மற்றும் சுகாதார வாழ்வு பற்றியும், இன்னும் அதிகமான காரியங்களைப் பற்றியும் மிகவும் நேர்த்தியாக பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த 5 நாட்கள் பயிற்சி முகாமை Dr.Jolly Abel அவர்கள் பொறுப்பாக நடத்தி கொடுத்தார்கள். Dr.Abel ,Sis.Vanaja, & Sis.Angel அவர்களும் வகுப்புகள் நடத்தினார்கள். Mr.Wallace, Mr.Garette, Mrs.Beulah David அவர்கள் மொழியாக்கம் செய்தார்கள். 5 நாட்களும் Dahod Training Centre-ல் சுதேச ஊழியர்களும் மற்றும் ஊழியக்காரிகளும் தங்கியிருந்து பயின்றார்கள். இவர்களுக்கு உணவு மற்றும் தங்கும் வசதி கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு இரத்த பரிசோதனை செய்யப்பட்டு, சிகிச்சையும் கொடுக்கப்பட்டது, மேலும் கடைசி நாளில் தேர்வு நடைபெற்றது.

அதோடு பயிற்சி பெற்ற ஊழியக்காரிகள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது. இவர்கள் மிகவும் உற்சாகமாயும், ஒரு விரிந்த தரிசனத்தோடும், அதாவது சபையில் உள்ள பெண்களை நல்ல சுகாதாரத்திற்குள் நடத்த வேண்டும் என்ற சவாலுடன் திரும்பிச் சென்றார்கள். இவர்கள் மூலம் சமுதாயத்தில் ஒரு மாற்றம் உண்டாகும் என்று நம்புகிறோம். தேவன் தாமே எல்லாவற்றையும் வாய்க்கப்பண்ணுவாராக!

# காணிக்கை அனுப்பும் வழிகள்

⇨ தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்தவர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு வந்து கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதை மறவாமல் பெற்றுக் கொள்ளுங்கள்.

⇨ M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பலாம். அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியை கிழித்துக் கொடுக்கும் பகுதியில் எழுதும்படி தயவாய் கேட்டுக்கொள்கிறோம்.

⇨ D.D./Cheque மூலமாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்கள் காணிக்கையை Sharing Love Mission என்ற பெயருக்கு அனுப்பலாம்.

⇨ இன்டர்நெட்டில் NET TRANSFER வசதி உங்களுக்கு இருந்தால் NET TRANSFER மூலமாகவும் அனுப்பலாம்.

⇨ வெளிநாட்டில் வசிப்பவர்கள் Bank Of Baroda வங்கி மூலம் காணிக்கை அனுப்பலாம். FCRA A/c. No.07080100002672 - Sharing Love Mission. IFSC Code : BARB0TUTICO

---

**நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க் கண்ட வங்கிகள் இருந்தால் அங்கேயே எங்கள் கணக்கில் காணிக்கையைச் செலுத்தலாம்.**

வங்கி கணக்கு பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin, கிளை : தூத்துக்குடி

---

Tamilnad Mercantile Bank
A/c. No. : 106100710400009
I F S C Code : TMBL0000106

---

Axis (U.T.I) Bank
A/c. No. : 105010100094373
(IFS Code : UTIB0000105)

---

I.C.I.C.I Bank
A/C. No. 613901112799
(IFS Code : ICIC0006139)

---

ஆதரவாளர்கள் எங்களது வங்கிக் கணக்கில் காணிக்கை செலுத்தும் போது, உங்களது பெயரை கண்டிப்பாக கம்யூட்டரில் பதிவு செய்யும்படி ஒவ்வொரு முறையும் வங்கி அலுவலகரிடம் கூறி அதை உறுதி செய்து கொள்ளவும், இல்லையெனில் நீங்கள் செலுத்தும் காணிக்கை யார் செலுத்தியது என்ற விபரம் எங்களுக்கும் தெரியாமல் போக வாய்ப்புள்ளது.

## உங்கள் பங்கினை
## இந்த வருடம் அனுப்பிவிட்டீர்களா?

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே !**

உங்கள் கரங்களில் கிடைக்கும் அன்பு பகிர்வு இயக்கம் செய்தி மலர் ஆத்தும பாரத்துடன் வட இந்தியாவில் தேவன் தந்த தரிசன பணியான மிஷனெரி பணித்தள செய்திகளையும், தேவனுடைய வார்த்தைகளையும், ஜீவனுள்ள சாட்சிகளையும், மிஷனெரி வாழ்க்கை வரலாறுகளையும் மற்றும் ஆவியானவரால் கொடுக்கப்படும் காரியங்களையும் சுமந்து வருகிறது. இம்மலருக்காக அதிகமாக ஜெபித்து, உழைத்து, அநேக செலவுகள் செய்து அனுப்புகிறோம்.

இந்த தரிசனப்பணியை, தேவன் பேரில் கொண்ட அன்பின் நிமித்தமாக, தியாகத்துடனும், ஆத்தும பாரத்துடனும் மாதந்தோறும் / வருடந்தோறும் தாங்கி வரும் ஆதரவாளர்களுக்காக தேவனைத் துதிக்கிறேன். இந்த மலர் மாதந்தோறும் ஊழியங்களை அறிந்து தேவனைத் துதிக்கவும், மேலும் பாரத்துடன் ஜெபிக்கவும் இம்மலர் அனுப்பப்படுகிறது. ஆனால் அநேகர் இந்த ஊழியத்திற்காகவோ, இந்த பத்திரிக்கைகளுக்காகவோ வருடத்திற்கு ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லை.

வட இந்திய ஊழியங்களுக்காக செலவு செய்யப்படும் இப்பணிக்காக, இம்மலரை வாசிக்கும் அன்பர்கள் இந்த வருடத்தில் 10 மாதங்களில் ஒரு முறை கூட காணிக்கை அனுப்பவில்லையெனில், தயவாக உங்கள் அன்பின் பங்கினை ஜெபித்து அனுப்பி, ஊழியங்களைத் தாங்க அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். அல்லது குறைந்தது பத்திரிகை வருடச்சந்தா காணிக்கையான **ரூ.60/–** அனுப்ப வேண்டுகிறேன்.

நீங்கள் அனுப்பும் தியாகமான காணிக்கையையும், உங்கள் குடும்பத்தையும், பிள்ளைகளையும் ஆசீர்வதிப்பாராக

## *உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்...*

*அன்பான ஆதரவாளர்களே,*

உங்களது முகவரியில் மாற்றங்களோ அல்லது திருத்தங்களோ இருந்தால், மேலும் உங்களது முகவரி மாறும்போதோ நீங்கள் தவறாது எங்களுடன் தொடர்புகொண்டு எங்களிடம் அவற்றை உடனடியாக தெரிவிக்க அன்பாய்க் கேட்கிறோம்.

இது நாங்கள் உங்களுடன் சரியாக தொடர்பு கொள்ளவும், நாங்கள் அனுப்பும் கடிதங்கள், பத்திரிகைகள், ஊழிய அறிக்கைகள், ரசீது, தபால்கள் சரியாக உங்களுக்குக் கிடைக்கவும் உதவும். மேலும் உங்களது தொலைபேசி மற்றும் மொபைல் எண்களை எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

# ஷாலோம் பிரதிநிதிகள்

*கிறிஸ்துவில் பிரியமானவர்களே,*

குஜராத், இராஜஸ்தான் மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் பீல் மக்கள் மத்தியில் நடைபெற்றுவரும் நமது ஷாலோம் ஊழியங்களுக்காக அநேக மாவட்டங்களில் பிரதிநிதிகள் தன்னார்வத்துடன் செயல்பட்டு வருகிறார்கள். ஷாலோம் ஊழியங்களுக்கு காணிக்கைக் கொடுக்க முன்வரும் ஆதரவாளர்கள் அந்தந்த பகுதிகளில் செயல்பட்டு வரும் நம் ஷாலோம் ஊழியர்கள் மற்றும் ஷாலோம் பிரதிநிதிகளை தொடர்புகொள்ள அன்பாய் கேட்கிறோம்.

| S.I. No. | Rep. Code | Name | Dist. | Phone No. |
|---|---|---|---|---|
| 1 | Rep029 | Mr. Ebenezer Daniel.B(Staff) | Chennai | 9344475468 |
| 2 | Rep053 | Mr. Pauldurai.S | Chennai | 9444899908 |
| 3 | Rep006 | Mr. Samuel.M | Chennai | 044-22440989 |
| 4 | Rep020 | Mr. Immanuel Sekar.R | Chennai | 8015136647 |
| 5 | Rep078 | Mrs. Queenie Charles | Chennai | 9952914364 |
| 6 | Rep039 | Mrs. Manoranjitham Wilfred | Chennai | 9884210600 |
| 7 | Rep004 | Mr. John Victor.C | Coimbatore | 9843313760 |
| 8 | Rep013 | Pr. Anantharaz (APH) | Coimbatore | 9843074137 |
| 9 | Rep021 | Mr. Kingston.S.V | Coimbatore | 9442539044 |
| 10 | Rep018 | Mr. Jebasingh Santhosam.R | Erode | 9488560799 |
| 11 | Rep008 | Mr. Daniel Jayaraj | Hyderabad | 9849354493 |
| 12 | Rep037 | Mr. Selvadurai.G(Staff) | K.K.Dist. | 9487689869 |
| 13 | Rep003 | Mr. George.P | K.K.Dist. | 9443993423 |
| 14 | Rep024 | Mr. Kingbert.L | K.K.Dist. | 9486864820 |
| 15 | Rep011 | Doctors Taftee Fellowship | K.K.Dist. | 04652-233437 |
| 16 | Rep068 | Mr. David Bright Singh.P | K.K.Dist. | 9442655321 |
| 17 | Rep064 | Mr. Charles.P | K.K.Dist. | 04651-273112 |
| 18 | Rep071 | Mr. John Victor.A | K.K.Dist. | 04651-261116 |
| 19 | Rep079 | Mr. Johnson.N | K.K.Dist. | 9486797772 |
| 20 | Rep065 | Mr. Jabarson.S.M | K.K.Dist. | 9443593153 |
| 21 | Rep067 | Mrs. Geetha Gopi | K.K.Dist. | 04651-277265 |
| 22 | Rep069 | Mrs. Vasantha Kumarai.T.C | K.K.Dist. | 04651-260805 |
| 23 | Rep061 | Mr. Jerry David.P | K.K.Dist. | 9791781354 |
| 24 | Rep063 | Mr. Christopher.P | K.K.Dist. | 9787958155 |
| 25 | Rep014 | Mrs. Vasantha Selvaraj.G | K.K.Dist. | 04652-286444 |
| 26 | Rep070 | Mrs. Rose Mary.M | K.K.Dist. | 9488336467 |
| 27 | Rep066 | Mr. Kislet.A | K.K.Dist. | 04651-28680 |
| 28 | Rep052 | Mr. Libin Thampi.P | K.K.Dist. | 9047545031 |
| 29 | Rep009 | Mrs. Ruby Prabhavathi.M | Madurai | 9940753581 |
| 30 | Rep077 | Mr. Manohar.S.P.M & Fly | Tirunelveli | 9843312733 |

| | | | | |
|---|---|---|---|---|
| 31 | Rep073 | Mr. Pitchai Jebaraj.G | Tirunelveli | 9842168482 |
| 32 | Rep033 | Mr. Jeyapaul.M | Tirunelveli | 04634-223011 |
| 33 | Rep084 | Mr. Johnson Selvakumar.D | Tirunelveli | 9781833699 |
| 34 | Rep028 | Mr. Johnson Jebaraj.J(Staff) | Tuticorin | 9362617374 |
| 35 | Rep023 | Mr. Sam Gunaseelan.S(Staff) | Tuticorin | 9345675468 |
| 36 | Rep002 | Mr. Allen Elvis.S (Staff) | Tuticorin | 9344727978 |
| 37 | Rep076 | Mr. Judes Rathish kumar.J(Staff) | Tuticorin | 9600695598 |
| 38 | Rep080 | Mr. David.R(Staff) | Tuticorin | 9025587440 |
| 39 | Rep005 | Mr. Jeyabal.I.A(Staff) | Tuticorin | 9789718935 |
| 40 | Rep057 | Mr. Jeyaprakash.S.P(Staff) | Tuticorin | 9994077782 |
| 41 | Rep015 | Mr. Ebenezer David(Staff) | Tuticorin | 8754901554 |
| 42 | Rep088 | Ms. Elizabeth (Staff) | Tuticorin | 9597154709 |
| 43 | Rep050 | Mrs. Chandra.J (Staff) | Tuticorin | 9976626661 |
| 44 | Rep049 | Ms.Karunya.K (Staff) | Tuticorin | 8870329311 |
| 45 | Rep042 | Mrs. Esther Jeba Mathu (Staff) | Tuticorin | 7708941251 |
| 46 | Rep089 | Mrs. Geetha.J (Staff) | Tuticorin | 9791391853 |
| 47 | Rep059 | Mr. Arputharaj Margoschis.J | Tuticorin | 9486222012 |
| 48 | Rep062 | Mr. Baskar.C | Tuticorin | 9994170465 |
| 49 | Rep030 | Mr. Sekaran.S.A | Tuticorin | 9944210217 |
| 50 | Rep016 | Mrs. Shanthi Livingston | Tuticorin | 9787648246 |
| 51 | Rep048 | Mr. Selvaraj.S | Tuticorin | 7598566171 |
| 52 | Rep083 | Mr. Valentine John | Tuticorin | 9940008442 |
| 53 | Rep058 | Mrs. Pattu Rose Sargunam | Tuticorin | 9487324068 |
| 54 | Rep082 | Ms. Esther Jeya | Tuticorin | 8870820821 |
| 55 | Rep026 | Mr. Gunasingh.D | Tuticorin | 9442949151 |
| 56 | Rep036 | Mr. Rajan.Y | Tuticorin | 9443751027 |
| 57 | Rep031 | Mrs. Selva Seeli.G | Tuticorin | 9842193224 |
| 58 | Rep047 | Mr. Muthu.M | Tuticorin | 9894685538 |
| 59 | Rep046 | Mr. Balasingh | Tuticorin | 0461-2311012 |
| 60 | Rep035 | Mr. Thomas.I | Tuticorin | 9842509223 |
| 61 | Rep087 | Mrs. Anusia.J | Tuticorin | 9788854965 |
| 62 | Rep045 | Mr. Godwin.V | Tuticorin | 0461-2346251 |
| 63 | Rep007 | Mrs. Rajakani.S | Tuticorin | 9842217738 |
| 64 | Rep027 | Mrs.Nirmala Felixson | Tuticorin | 0461-2310766 |
| 65 | Rep012 | Mrs. Juliet Koilpillai | Tuticorin | 9894723162 |
| 66 | Rep041 | Mrs. Fathima Mary.T | Tuticorin | 7708072120 |
| 67 | Rep093 | Mrs. Jesu Marial.P | Tuticorin | 9486984296 |
| 68 | Rep094 | Mr. Ruban. | Tuticorin | 9894188978 |
| 69 | Rep092 | Mr. Paulraj.Y | Tuticorin | 8015807361 |
| 70 | Rep010 | Mrs. Juliet Immanuel | Rajapalayam | 9364114373 |

# ஆனி ஆர்ம்ஸ்ட்ராங்

(1850–1938) ***மிஷனெரி முன்னோடிகள்***

**ஆனி ஆர்ம்ஸ்ட்ராங்** மேரிலேண்டில் உள்ள பால்டிமோரில் 1850ஆம் ஆண்டு ஜூலை 11 ஆம் தேதி, பாப்திஸ்து குடும்பத்தினருக்கு மகளாகப் பிறந்தார். அவருடைய பெற்றோர், தந்தை ஜாண் டண் ஆர்ம்ஸ்ட்ராங், தாய் மேரி எலிசபெத் ஆர்ம்ஸ்ட்ராங் ஆவர். ஆனி குழந்தையாக இருந்தபோது அவளுடைய தந்தை மரித்தார். தனது பத்தொன்பதாம் வயதில் மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்ற அவர் ரிச்சர்டு புல்லரிடம் (Richard Fuller) ஞானஸ்நானம் பெற்று, மேரிலேண்டில் உள்ள பாப்திஸ்து சபையில் சேர்ந்தார்.



ஆனி யூட்டா ப்ளேஸ் பாப்திஸ்து சபையுடன் இணைந்து குறைந்தபட்சம் முப்பது வருடங்கள் குழந்தைகளுக்கு பாடம் எடுத்தார். இந்த சபையில் வைத்துதான் முதன்முதலில் ஆர்ம்ஸ்ட்ராங்கிற்கு ஊழியத்தில் வாஞ்சை ஏற்பட்டது. அவர் பால்டிமோர் மிஷனெரி ஸ்தாபனங்களுடன் இணைந்து ஊழியம் செய்தார். ஆனியினுடைய தாய் கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைத்திருந்ததுமன்றி, சபை ஊழியங்களிலும் விறுவிறுப்பாக காணப்பட்டார். வாலிப வயதில் அனி, பெண்கள் ஊழியம் சார்பில் நடைபெற்ற மிஷனெரிக் கூட்டத்திற்கு தன்னுடைய அம்மாவையும் அழைத்துச் சென்றார். கூட்டத்தில் ஆனி ஊழியத்திற்கு கொடுப்பதையும், தாங்குவதையும் ஜெபிப்பதற்கும் உள்ள முக்கியத்துவத்தையும் கற்றுக் கொண்டார். ஆனியின் போதகர் ரிச்சர்டு புல்லர், ஊழியம் குறித்ததான ஆழமான உணர்த்துதலை ஏற்படுத்தினார். அவருடைய தாயாரின் ஊழிய வாஞ்சையும் மற்ற பெண்களின் ஊழிய வாஞ்சையும் ஆனி ஊழியம் செய்வதற்கான சூழலை அவருடைய வீட்டிலும் சபையிலும் உண்டாக்க உதவி செய்தது.

லேட்டி மூன் போன்ற மிஷனெரிகளின் அரிய செயல்களை, ஆனி கேட்டும் வெளிதேச ஊழியம் செய்வதற்கான எண்ணம் இல்லாதவராக இருந்தார். அதற்குப் பதிலாக அவர் இந்தியர், கருப்பு இனத்தினர் மற்றும் குழந்தைகள் மத்தியில் நடைபெறும் ஊழியத்தைப் போல் தன் சொந்த தேசத்திலே ஊழியம் செய்ய வாஞ்சித்தார். 1880 ஆம் ஆண்டு ஆனியின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக இருந்தது. இந்தியர்களின் ஆதரவற்றநிலை மற்றும் அவர்களின் தேவையைக் குறித்து சொல்லக்கேட்டபோது, ஆனியும் மற்றும் சில பெண்களும் மிஷன் பள்ளியில் படித்துவரும் இந்தியக் குழந்தைகளுக்கு உடைகளை அனுப்பி வைத்தனர். அன்றிலிருந்து அவர், ஊழியங்களுக்கு உதவிக்கரம் நீட்டியதுமன்றி, ஊழியங்களை தலைமையேற்று நடத்திச் சென்றார்.

1888ஆம் ஆண்டு ஆர்ம்ஸ்ட்ராங் பெண்கள் மிஷனெரி சங்கத்தை ஸ்தாபித்தார். 1888 ஆம் ஆண்டு முதல் 1906ஆம் ஆண்டு வரை அவர் தேசிய அளவிலாக பெண்கள் மிஷனெரி

சங்க இணைச் செயலாளராக இருந்தார். அவர் ஊழியங்களையும் ஊழியக்கல்வியையும் பற்றிய கருத்துக்களையும் செயல்பாடுகளையும் ஒரு வரைமுறைக்குள் கொண்டு வந்தார். அது இன்றும் தெற்கு பாப்திஸ்து சபையினரை வழிநடத்துகிறது. இந்தச் சங்கத்தின் குறிக்கோளானது சதர்ன் பாப்திஸ்து சபையினரை வழிநடத்துகிறது. இந்தச் சங்கத்தின் குறிக்கோளானது சதர்ன் பாப்திஸ்து மிஷன் ஊழியங்களுக்கும் கூட்டங்களுக்கும் உதவி செய்ய பெண்களை ஈடுபடுத்துவது. ஆர்ம்ஸ்ட்ராங் பெண்கள் மிஷனெரி சங்கத்தோடு தன்னுடைய ஆவி, ஆத்துமா, சரீர பெலனை சதர்ன் பாப்திஸ்து கன்வென்ஷன் ஊழியங்களுக்கு பயன்படுத்தினார். மேலும் மிஷனுக்காக ஜெபத்தேவையையும் பணத்தேவையையும் சந்திப்பதற்கு உதவினார்.

பெண்கள் மிஷனெரி சங்க தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தும், ஆர்ம்ஸ்ட்ராங் மாதச்சம்பளத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. பெண்கள் மிஷனெரி சங்கம் சார்பில் நடைபெற்ற கூட்டங்களுக்கு அவர் தன் சொந்த செலவிலேயே சென்று, ஊழியங்களை செய்தார். 1866ஆம் ஆண்டு அவர் மேரிலேண்ட் மிஷன் இணைச்செயலாளராக இருந்தார். அவர்கள் பால்டிமோரில் உள்ள ஜனங்களுக்கு மிஷன் புத்தகங்களைக் கொடுத்தனர். ஆனி 1901 ஆம் ஆண்டு வரை 21 நாட்களில், 3300 மைல்கள் பயணம் செய்து 19 இடங்களில் ஊழியம் செய்துள்ளார்.

ஆனி கிறிஸ்துவை முழு இருதயத்தோடு விசுவாசிப்பதற்கு தன்னுடைய கரங்களை வைத்து வெளிப்படுத்துகிறார். அவர் அதிகமான நேரத்தை ஊழியத்திற்கு உதவும்படி அச்சிலும், எழுதுவதிலும் செலவிட்டார். 1893ஆம் ஆண்டில் மட்டும் 18,000 கடிதங்களை எழுதியுள்ளார். ஆனி குழந்தைகளை அரவணைப்பதிலும், உடைகளை அணிவிப்பதிலும், தேவனுடைய வார்த்தையை கூறுகூதிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். ஆனி தனது கரங்களில் வேதாகமத்தை வைத்துக் கொண்டு, தேவனுடைய அன்பை மற்றவர்களுக்குக் கூறினார். ஆனி எப்பொழுதும் தனது கரங்களை குவித்து மிஷனெரிகளுக்காகவும் மற்றவர்களுக்காகவும், ஜெபித்துக்கொண்டே இருப்பார். ஆனி எந்த கல்லூரியிலும் சென்று கல்லாதவராக இருந்தும், அவருடைய எழுத்து, பேச்சு, வியாபார திறமை போன்றவை அவர் நன்றாகப் படித்தவர் என்று சுட்டிக்காட்டியது. ஆர்ம்ஸ்ட்ராங்க ஃபாரின் மிஷன் போர்டு, ஹோம் மிஷன் போர்டு, சண்டே ஸ்கூல் போர்டு போன்ற தலைவர்களுடன் நல்ல தொடர்புடையவராக இருந்தார்.

ஆனி சபைகளுக்குச் சென்று கிறிஸ்துவுக்காக ஜனங்களை சந்திக்கும்படி, ஊழியங்களுக்காக கொடுக்கவும், ஜெபிக்கவும் கூறினார். சீனாவில் ஊழியம் செய்து வந்த மிஷனெரி லேட்டிமூன் அவர்களிடமிருந்து ஊழியத்திற்கு உதவி வேண்டுதல் வந்தது. 1888ஆம் ஆண்டு ஆர்ம்ஸ்ட்ராங் அதற்காக ஜெபிக்கவும், நிதி மற்றும் பொருள் உதவிகளையும் வழங்கவும் செய்தார். 1888லிருந்து சதர்ன் பாப்திஸ்து சார்பில் நடைபெற்ற ஜெபகூட்டத்தில் வெளி ஊழியங்களுக்காக எடுக்கப்பட்ட காணிக்கையில் ஆர்ம்ஸ்ட்ராங் அதிக நிதி சேர்க்கும்படி பெண்களை வழிநடத்தினார். மிஷனெரிகளை உற்சாகப்படுத்துவதும் ஜெபிப்பதும் பரிந்துரை செய்வதும் காணிக்கைக்காக மற்றவர்களை சந்திப்பதும் அவரின் சேவையாக இருந்தது. அவருடைய சேவையின் முழக்கம் “முன்னோக்கிச் செல்” என்பதாக இருந்தது. கறுப்பு இன மக்கள் மீது பாரம் கொண்ட அவர், கறுப்பு இன மேரிலேண்டின் தென்பகுதி முழுவதும் சென்று

பெண்கள் மிஷனெரி மிஷனை பலப்படுத்தினார். மேலும் ஹோம் மிஷன் போர்டு ஃபாரின் மிஷன் போர்டு தலைவர்களுக்கு அடிக்கடி புதிய யோசனைகளைக் கூறி வந்தார். அநேக சபைகளின் தேவைகளை பார்த்த ஆர்ம்ஸ்ட்ராங், சபைக்கட்டிடங்கள் கட்டுவதற்கான நிதியை சேகரித்து சபைகளுக்கு உதவி செய்தார்.

1901 ஆம் ஆண்டு பிலிப் S. இவான்சும் அவருடைய மனைவி மேரி லேவரிங் இவான்சும் மருத்துவ டாக்டராக சீனாவுக்கு நியமிக்கப்பட்டது. ஆர்ம்ஸ்ட்ராங்கிற்கு, ஃபாரின் மிஷன் உடனான நெருங்கிய நிலை ஏற்பட உதவியது. ஆனி ஏற்கனவே சீனாவில் செய்யப்பட்டு வரும் ஊழியங்களில் ஆர்வமுடையவராய் இருந்தது மட்டுமின்றி, தன்னுடைய பெரியப்பாவின் இரண்டாவது மகளின் வரவினிமித்தம், சீனாவில் மருத்துவ ஊழியத்திற்காக நிதி திரட்டுவதில் ஆர்வம் காட்டினார். தான் எழுதிய புத்தகத்தில் மருத்துவ ஊழியத்தையும் கல்வியையும் உயர்த்துவதற்கு உதவி அளிப்பது முக்கியம் என்று எழுதியுள்ளார். மிஷனெரிகள் நமக்குப் பதிலாக ஊழியம் செய்கிறவர்கள் என்று நம்பின ஆர்ம்ஸ்ட்ராங். தனிப்பட்ட முறையில் மிஷனெரிகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் உதவிகள் செய்தார்.

அவர் குற்றவாளி என மற்றவர்களால் தீர்மானிக்கப்பட்டதாலும் முரண்பாடுகளாலும் 1906ஆம் ஆண்டு அனைத்துவித பதவிகளையும் துறந்தார். 1906ஆம் ஆண்டு முதல் அவருடைய இறப்பு வரை, ஆர்ம்ஸ்ட்ராங் தனது ஊழியத்தைச் செய்து வந்தார். அவர் தனது சபை மூலம் சேவையிலும் கூட்டத்தேவைகளை சந்திப்பதிலும் மூழ்கியிருந்தார். 1938ஆம் ஆண்டு டிசம்பர் 20ஆம் தேதி ஆர்ம்ஸ்ட்ராங் மரித்தார். அவருடைய உடலி மேரிலேண்ட் பால்டிமோரில் உள்ள கிரீன் மவுண்ட் சிமெட்ரியில் அடக்கம் செய்யப்பட்டது. அவருடைய கல்லறை **“அவள் தன்னால் இயன்றதைச் செய்தாள்”** என்று சொல்லுகிறது.


`ôúXôm ª`ù]¬ ù_TdáÓûL

| நாள் | நேரம் |
|---|---|
| **12.11.2011, சனிக்கிழமை** | **மாலை 5.00 மணி முதல் 7.00 மணி வரை** |

*இடம் :* **ஷாலோம் கிளை அலுவலகம்,**
M.T.N. பில்டிங், (மகளிர் காவல் நிலையம் அருகில்)
வடக்குத் தெரு, மார்த்தாண்டம்

*யாவரும் குடும்பமாய் கலந்து கொண்டு ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ளவும் அன்பாய் அழைக்கிறோம்.*

தொடர்புக்கு

**சகோ. செல்வதுரை,** Cell : 94876-89869,
**சகோ. ஜார்ஜ்,** Cell : 98944-78405 **சகோ. கிங்பேர்ட்,** Cell : 94868-64820

## நாட்டு நடப்புச் செய்திகள்....

சுற்றுக் சூழல் மாசு காரணமாக பூமியின் மேற்பரப்பில் ஓசோன் மண்டலத்தில் ஓட்டை விழுந்துள்ளது. அண்டார்டிகா மீதான ஓசோன் மண்டலத்தில் ஓட்டை ஏற்பட்டதை முதன் முமதலில் 1970ம் ஆண்டுகளில் தான் விஞ்ஞானிகள் கண்டு பிடித்தனர். இந்த ஓட்டை ஆண்டுக்கு ஆண்டு விரிவாகி வருகிறது. 2006ம் ஆண்டு செலுத்தப்பட்ட அமெரிக்காவின் ஆரோ செயற்கைக்கோள், அண்டார்டிகா மீது உள்ள ஓசோன் மண்டலத்தில் ஏற்பட்டுள்ள ஓட்டை 2 கோடியே 75 லட்சம் சதுர கி.மீ. பரப்பளவுக்கு விரிவு அடைந்து உள்ளதை கண்டு பிடித்தது. இது வட அமெரிக்காவை விட பெரிதாகும். சூரியனிலிருந்து புற ஊதா கதிரிலிருந்து பூமியையும் நம்மையும் காப்பது இந்த ஓசோன் மண்டலமாகும். இதில் ஓட்டை விழுவது மிகப் பெரிய ஆபத்தைக் கொண்டு வரும்.

---

அரபிக் கடலில் சென்று கொண்டிருந்த வர்த்தக கப்பல் ஒன்றை, கடற் கொள்ளையர்கள் கடத்த முயன்றனர். அந்தக் கப்பலில் ஏற்கனவே பதுங்கியிருந்த கடற்கொள்ளையர்கள் சிலர், தங்கள் கூட்டாளிகளுக்குத் தகவல் கொடுத்தனர். இதையடுதது ஒரு பெரிய படகில், கடற்கொள்ளையர்கள் ஆயுதங்களுடன், வர்த்தக கப்பலை நெருங்கி வந்தனர். இந்த தகவல், இந்திய கடற்படைக்குத் தெரிய வந்தது. உடனடியாக ஹெலிகாப்டரில் கண்காணித்து, வர்த்தக கப்பலைக் கடத்தும் கடற்கொள்ளையர்களின் முயற்சி முறியடிக்கப்பட்டது.

---

நேபாள நாட்டில் இங்கிலாந்து நாட்டு விமானம் ஒன்று காணாமல் போனது. இதைக் கண்டுபிடிக்க நேபாள ராணுவ விமானம் ஒன்று அனுப்பப்பட்டது. இதில் 6 நேபாளிகள் இருந்தனர். நேபாள்கஞ்ச் என்ற இடத்தில் இருந்து புறப்பட்ட இந்த விமானம் இந்திய எல்லையின் அருகே தரையில் விழுந்து உள்ளது என்பது தெரியவந்தது. இந்த விமானத்தில் பயணித்த 6 பேரும் பலியாயினர்

நன்றி : www.dinamalar.com


## எங்களுடன் தொடர்பு கொள்ள

| தலைமை அலுவலகம் | பணித்தள அலுவலகம் |
|---|---|
| **SHARING LOVE MISSION**<br>168/5, Caldwell Colony, 3rd Street,<br>**Tuticorin - 628 008.** Tamil Nadu.<br>Phone: 0461 - 2375468<br>Cell : 9345675468 | **Rt. Rev. Dr. V. DEVADASS**<br>Founder & General Secretary<br>Shalom, Christian Kamdar Society,<br>Dahod - 389 151, Gujarat<br>Ph. : 02673 - 325468<br>Cell : 09377445468 |

**email : info@shalommission.in website : www.shalommission.in**

## கிராம ஆலயம்

# புரக்குவா

## குஜராத்



குஜராத் மாநிலத்தில் தாகோத் மாவட்டத்தைச் சேர்ந்ததுதான் இந்த புரக்குவா கிராமமம்.

இந்த கிராமத்தைச் சேர்ந்த ஜனங்கள் இறந்த முன்னோரின் ஆவிகளை தெய்வமாக வணங்கும் பழக்கமுடையவர்கள். மேலும் சாராயம் மற்றும் அனைத்து விதமான போதை பொருட்களுக்கும் அடிமைகளாக வாழ்பவர்கள். இதே சூழ்நிலையில் வாழ்ந்து வந்தவர்தான் இந்த கிராமத்தைச் சேர்ந்த சகோ. கோர்சிங் டாமோர் அவர்கள்.

சுமார் 18 ஆண்டுகளுக்கு முன் இவரது குடும்பம் முழுவதும் முன்னோர்களின் இறந்த ஆவிகளை வணங்கி வந்தபடியால் பிசாசின் பிடியில் சிக்குண்டு தவித்துவந்தது. சகோ. கோர்சிங் டாமோர் அநேக பாவங்களுக்கும், போதை வஸ்துகளுக்கும் அடிமைப்பட்டிருந்தார். இந்த சூழ்நிலையில் இவரது குடும்பத்தின் விடுதலைக்காக அநேக மந்திரவாதிகளை நாடிச் சென்று மந்திரக் கிரியைகள் செய்தனர் ஆனாலும் பலனில்லை.

இறுதியாக குஜராத், தாகோத்தில் பேய் பங்களா என்று அழைக்கப்பட்ட ஒரு வீட்டில் தங்கியிருந்து ஷாலோம் பிஷப் சகோ. தேவதாஸ் – சகோதரி வஹிதா தேவதாஸ் தம்பதியினார் ஊழியம் செய்து வருவதை அறிந்து அங்கு ஜெபிக்கும்படியாக குடும்பமாக சென்றனர், ஜெபத்தின் மூலம் தேவன் அவர்கள் குடும்பத்திற்கு அற்புத விடுதலையைக் கொடுத்து இரட்சித்தார். அதன்பின் சகோ. கோர்சிங் டாமோர் தன்னை ஊழியத்திற்கென்று அர்ப்பணித்து ஷாலோம் ஊழியத்துடன் இணைந்து ஊழியத்தை ஆரம்பித்தார். அதன்பின் அங்கு ஒரு சிறிய ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற்று வந்தது.

தற்போது அங்கு விசுவாசிகள் அதிகரித்த காரணத்தினாலும், பழைய ஆலயத்தில் அடிக்கடி பழுது பார்க்கும் நிலை உள்ளதாலும் சகோ. கோர்சிங் டாமோர் அவர்களின் சொந்த நிலத்தில் ரூ. 2லட்சம் மதிப்பில் ஒரு பெரிய அழகிய ஆலயம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இந்த ஊழியரின் மூலமாக சுற்று வட்டாரத்திலுள்ள கிராமங்களில் 6 திருச்சபைகள் உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது இந்த ஊழியர் B.T.S., படித்து முடித்து 2009–ம் ஆண்டு ஷாலோம் திருமண்டலத்தின் மூலமாக போதகராக அபிஷேகம் செய்யப்பட்டு, ஊழியம் செய்து வருகிறார்.

இந்த கிராம ஆலயம் நமது ஷாலோம் ஊழியங்களை நேசிக்கும் ஒரு குடும்பத்தார் அளித்த நிதி உதவியின் மூலம் கட்டப்பட்டதாகும்.

**ரூ. 2 இலட்சம் மதிப்பில் அல்லது ரூ. 1 இலட்சம் மதிப்பில் ஆலயங்களைக் கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.**

Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449.
Postal Regn. No. TTN/07/2009-2011.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

ஜெபியுங்கள்

ஷாலோம் சுதேச ஊழியர்

# குடும்ப முகாம் - 2011

இடம்
ஆனந்த், குஜராத்

நாள்
8,9,10, நவம்பர் - 2011

வல்லமையின் செய்தி :

**Rev. S. ராஜன் எட்வர்ட்**
(கிறிஸ்துவின் சேனை, திருநெல்வேலி)

**Dr. R. அன்பு ராஜன்**
(Peace Health Centre, Palayamkottai)

**Bro. P. அகஸ்டின் ராஜசேகர்**
(மன்றாட்டு ஜெப ஊழியம், முதலூர்)

**Pr. A. டேனியல்** (மும்பை)

**Rt. Rev. Dr. V. தேவதாஸ்**
(பேராயர், Shalom Diocese in India)

**சகோதரி வஹிதா தேவதாஸ்**
(Sharing Love Mission)

மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர்



Owned and Published by V. Devadoss from 168/5, Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 008. and Printed by S.Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin - 628 002. Editor : V. Devadoss